JESUS REDEEMS MINISTRIES

# இளைஞர் உலகம்

மலர் 10 | இதழ் 02 | மே 2019
தனிப்பிரதி ₹10
ஆண்டு சந்தா ₹100







Derek Redmond
(Bletchley, England)

## உண்மையான ஊக்கம்

உடைந்த வாழ்க்கையையும்,
உருகொடுத்து எழும்பப் பண்ணும்...



இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

# வாலிபர் உலகம்

## உள்ளே...


Page No. 06



Page No. 12



Page No. 20



Page No. 24



Page No. 31




## FEEDBACK

வாலிபர் உலகம் பத்திரிகையில் வந்த ஒரு சின்ன பகுதியின் மூலம் நான் என் தற்கொலை எண்ணத்திலிருந்து விடுதலை பெற்றேன். - **அசோக்,** வேலூர்

ஆலோசனை பகுதி மற்றும் வேத தியானம் பகுதி என்னை மிகவும் தொட்டது. - **மதுபாலா**

உணர்ச்சிகள் பகுதியில் வந்த “கோபம்” என்ற பகுதியை படித்த பின்பு நான் கோபப்படாமல் பொறுமையை கேட்டு பெற்றுக்கொண்டேன். - **பாரதி**

**Mo / Cheque / DD :** "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும்.

***வாலிபர் உலகம் பத்திரிகை சந்தா மற்றும் வாலிபர் ஊழியத்திற்கு நீங்கள் அனுப்பும் காணிக்கைகளை நாலுமாவடி முகவரிக்கு “வாலிபர் ஊழியம்” என்று குறிப்பிட்டு அனுப்பவும்.***

**SMS or WhatsApp**

இப்பத்திரிகையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whatsapp மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

**9750955547**


ஆசிரியர்:
**மோகன் சி. லாசரஸ்**

இணை ஆசிரியர்:
**அவினாஷ்**

ஆசிரியர் குழு:
**ரெக்ஸ் கிளமென்ட்**
**பிரிசில்லா பால் | ஜிஷ்யா**
**ஜான் இராஜேந்திரன்**
**லீனா அவினாஷ் |**
**ரெபேக்கா | ரேச்சல்**
**கிளாடிஸ் | ரவி | ஜாஸ்மின்**

வடிவமைப்பு: **வின்சென்ட்**

நிர்வாகம்:
**பெனீட்டா**



எங்களது முகவரி:

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**

நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211. Phone: 04639-220022. | Cell:9750955547

youth@jesusredeems.org |www.jesusredeems.com | www.youthworld.in



# உண்மையான ஊக்கம்

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**









அது ஒரு ஒலிம்பிக் போட்டியின் உச்சம்! 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்திற்குத் தயாராகி, மின்னலைப் போல் பாய்ந்து செல்லக் காத்திருக்கும் ஆண்களின் அணி வரிசையில், அந்தத் துடிப்பான வாலிபன் Derek Redmond. Barcelonaவே Derek Redmondடை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயம், துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் விரைந்தனர் வீரர்கள். 100 மீட்டர் தொலைவு வரை Derek எல்லோரைக் காட்டிலும் முன்பு ஓடிக் கொண்டிருந்தார். சடுதியில் அவர் வலது கால் தொடை சுளுக்க, வலியின் வேதனையில் சுருண்டுப் போனார். தன்னைத் தாண்டி அத்தனை வீரர்களும் ஓடிக் கொண்டிருக்க, சுளுக்கிய காலோடு மறுபடியும் ஓடத் துணிந்தார் Derek. பலர் அவரை தடுத்தும் அவர் கேட்காமல் ஓட, சட்டென்று ஒரு வயதானவர் ஓடிவந்து Redmond ரோடு ஓட ஆரம்பித்தார். அவர் தான் Redmondயின் தந்தை ஜிம். **மகனே போதும், நீ வலியோடே ஓட வேண்டாம், விட்டுவிடு என்றார்.** ஆனால் Redmond “இல்லை ஓடுவேன்” என்றார். அதற்குத் தந்தை அப்பொழுது சரி **“நாம் சேர்ந்து ஓடுவோம்”** என்று சொல்லி இரண்டு பேரும் சேர்ந்து 400 மீட்டர் ஓடி முடித்தார்கள்.

மனம் உடைந்த அந்த நேரத்தில் “வா சேர்ந்து ஓடுவோம்” என்ற தந்தையின் அந்த வார்த்தையே Redmondக்கு ஆறுதலாய் இருந்தது. அந்த உண்மையான ஊக்கம் தான் Redmondயை முழு ஓட்டத்தையும் ஓடி முடிக்க வைத்தது.

இன்றைக்கு தங்கள் வாழ்க்கையின் பாதியில் ஓட்டத்தை நிறுத்தியவர்கள் உண்டு, திசை மாறியவர்கள் உண்டு, தடம்புரண்டவர்கள் உண்டு. அவர்களைப் பார்க்கும்போது, வழக்கமான நம்முடைய செயல் என்ன? பரியாசம் செய்வதும், குற்றப்படுத்துவதும், கேலி செய்வதுமே. ஆனால் இன்றைக்கு நம்முடைய சமூகத்திற்கு தேவை உண்மையான ஊக்கமூட்டும் வார்த்தைகளே. தாவீது சோர்ந்துபோன போது, யோனத்தானின் ஊக்கமூட்டும் உண்மையான வார்த்தைகள் தான் அவனை பெலப்படுத்தித் தொடர்ந்து ஓட வைத்தது.

இன்றைக்கு நீங்கள் மற்றவரை உண்மையாக ஊக்கப்படுத்தினால், ஒருநாள் நீங்கள் சோர்ந்து போகும்போது ஒரு கரம் உங்களை ஊக்கப்படுத்தும்! ●

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

Heart Beat



அன்புத் தம்பி மதன்! உங்களின் கடிதத்தில் கூறியுள்ள படி உங்களின் உள்ளான மனவலி புரிகிறது. ஒரு இலட்சியம் இல்லாத வாழ்க்கை வாழ்வதால் பலரும் உங்களை ஏளனமாய் பேசுவதும், கேலி செய்து வேதனைப் படுத்துவதும் உங்களை எவ்வளவு காயப்படுத்தி இருக்கும் என புரிகிறது.

மதன்! ஒரு இலட்சியம் இல்லாமல் இருப்பது அல்லது ஒரு குறிக்கோளை நிர்ணயம் செய்யாமல் வாழ்வது ஒரு பெரிய குற்றம் அல்ல. ஆனால் அது ஒரு அறியாமை என்று சொல்லலாம். மேலும் நீங்கள் குறிக்கோள் எடுக்க தயாராக இருக்கும் ஒரு வாலிபன். எனவே நீங்களே உங்களை நொந்து கொள்ள வேண்டாம். இதுவரை குறிக்கோள் நிர்ணயம் செய்யாத நீங்கள், இன்றைக்கு ஒரு குறிக்கோள் அல்லது ஒரு இலக்கை நிர்ணயம் செய்தால் அதில் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

**நான் கல்லூரி இரண்டாம் ஆண்டு படிக்கிறேன். எனக்கென்று இது வரைக்கும் எந்தவிதமான இலட்சியமும் இல்லை. இலட்சியமே இல்லாமல் இது வரைக்கும் படித்தேன். ஆனால் எல்லோரும் படித்து முடித்து என்ன ஆகப் போகிறாய் என்று கேட்கும்போது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. என்னுடைய நோக்கம், ஆண்டவர் என்னை எந்த பாதையில் நடத்துகிறாரோ அந்தப் பாதையில் போக வேண்டுமென்பதாகவே இருந்தது. ஆனால் இப்போதைய சூழ்நிலையில் நான் ஒரு இலட்சியத்தோடு படித்தால் தான் அந்த துறையில் என்னால் சாதிக்க முடியும் என்று அறிந்து கொண்டேன். எனக்குள் இருக்கிற லட்சியத்தை எப்படி கண்டுபிடிப்பது? அந்த லட்சியத்தோடு படித்தால் தான் சாதிக்க முடியுமா? லட்சியம் இல்லை என்றால் சாதிக்க முடியாதா? மிகவும் குழம்பி இருக்கிறேன்... எனக்கு பதில் சொல்லுங்கள்.** – மதன், கன்னியாகுமரி



ஆனால் இன்றைய வாலிபர்கள் மத்தியில் இலக்கு என்பது இல்லாத ஒன்றாக மாறிவிட்டது. அல்லது தாங்கள் முன்வைக்கும் இலக்கு சரியான இலக்காக இல்லை. எனவே அடைய முடியாத இலக்கைப் பார்த்து சோர்ந்துபோய், துவண்டு போய்விடுகின்றனர். ஆங்கிலத்தில் இப்படியாக சொல்வார்கள் "NO PAIN, NO GAIN" வேதனையில்லாமல் உயர்வு இல்லை. எனவே ஒரு நோக்கத்தை அல்லது இலக்கை அடைவது என்பது சாதாரண காரியம் அல்ல. அதற்கு உங்களின் முழு அர்ப்பணிப்பும் விடாப்பிடியான தொடர் முயற்சியும் அவசியம்.

பல நேரங்களில் Pulsar Bikeக்காக விடாப்பிடியாக பெற்றோரிடம் முரண்டு பிடித்து வாங்கும் வாலிபர்கள், தங்கள் படிப்பில் கணிதம் சரியாக போட முடியவில்லை என்றால், கணக்குப் பாடத்தை மூட்டைக்கட்டி வைக்கின்றனர். எனவே முடியாத ஒன்றை சற்று முயற்சிக்க மனம் இடம் கொடுப்பதில்லை.



மதன்! இன்றைக்கு ஒரு இலக்கு உங்களுக்கு நீங்கள் முடிவு செய்தால், அதை நோக்கி பிரயாணப்படும்போது வெற்றி உண்டு. இலக்கு என்பது ஒரு சுக்கான் என்று சொல்லலாம். எவ்வளவு பெரிய கப்பலாய் இருந்தாலும் அது மாலுமி செலுத்தும் திசையை நோக்கி செல்ல உதவும் சிறிய கருவி தான் “சுக்கான்”. அதுதான் போய் சேர வேண்டிய இலக்குக்கு கொண்டு சேர்க்கிறது.

கடல் அலைகள் தன் விசையால் கப்பலை எந்த பக்கம் மாற்றினாலும், அடைய வேண்டிய இடத்துக்கு கொண்டு செல்ல வேண்டியது ‘சுக்கான்’ மட்டுமே.

எனவே, இலக்கு என்பது ஒரு சுக்கானைப் போன்றது, அது இல்லாமல், சென்று சேர வேண்டிய இலக்கை அடைய முடியாது.

மதன்! நீங்கள் யோசிப்பதுபோல் இலட்சியத்தோடு செயல்பட வேண்டும். இன்றைய வாலிபர்கள் UPSC போன்ற பல தேர்வுகள் எழுத அதிக ஆர்வம் காட்டுகின்றனர். முன்பெல்லாம் இஞ்சினியர் இல்லாவிட்டால் மருத்துவம், மிஞ்சிப்போனால் IT இதைத் தவிர வேறு ஒன்றும் யோசிக்காத நம் வாலிபர் இன்று விழித்து எழுந்துள்ளார்கள். IAS Coaching, Banking Coaching போன்ற பல பயிற்சிகளை மேற்கொள்ளத் துவங்கிவிட்டார்கள்.

B.com 1st year படிக்கும் போதே CA படிப்பதற்கு தேவையான Coaching classகளில் கலந்து கொண்டு தங்களை மேம்படுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

எனவே மதன்! இன்றைக்கு நீங்கள் ஒரு சரியான இலட்சியத்தை நிர்ணயித்து உங்கள் கல்லூரி படிப்பை முடிப்பதற்கு முன்னால் அரசு பணிகளுக்கு உங்களைத் தகுதிப்படுத்திக்கொண்டு, UPSCக்கு தயார் ஆகலாமே. யாருக்குத் தெரியும் 2020 UPSC ரிசல்ட் வரும்போது கன்னியாகுமரி மதன் IAS-ஆக தேர்வு பெற அதிக வாய்ப்பு உண்டு.




ஆனால் நீங்கள் முழு மூச்சுடன் கடினமாக உழைக்க வேண்டும். அப்படி நீங்கள் முற்படும் போது வெற்றி நிச்சயம்! நீங்கள் தேவன் மீது நம்பிக்கை வைத்திருப்பதால் நிச்சயம் உங்கள் லட்சியம் நிறைவேறும்!!

All the Best!! ●

# இயேசுவின் நண்பன்
## ஜெபக்குழு




தமிழ்நாட்டில் உள்ள 222 இயேசுவின் நண்பன் ஜெபக்குழுக்களில் சுமார் 1905 வாலிபர்கள் நம் தேசத்தின் இரட்சிப்பிற்காகவும், எழுப்புதலுக்காகவும் ஜெபித்து வருகிறார்கள். ஜெபக்குழுவாக இணைந்து ஜெபிப்பதால் இரண்டு காரியம் நடைபெறுகிறது. ஒன்று ஜெபிக்கும் வாலிபனின் வாழ்க்கை மாறுகிறது. இரண்டாவதாக அவன் ஜெபிக்கும் போது அவனை சுற்றியுள்ள சபையிலும், சமுதாயத்திலும் மாற்றம் ஏற்படுகிறது. நீங்கள் பாவத்தை மேற்கொள்ள, ஒரு ஜெபக்குழுவோடு உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். ஜெபமும், ஐக்கியமும் கிறிஸ்துவுக்குள்ளாக உங்களை நிலைநிறுத்தும்.

**உங்கள் பகுதியில் இத்தகைய ஜெபக்குழு அமைக்க விரும்பினால் எங்களை அணுகவும் 7598155502**



அழகான குடும்பம், அமைதியான வாழ்க்கை, பிரபல நிறுவனத்தின் உயர் பதவியில் உள்ள கணவருக்கு முழுநேர உதவி செய்யும் புத்திசாலியான குடும்ப நிர்வாகி, இரண்டு குழந்தைகளுக்கு அன்பான தாய் மிகவும் சந்தோஷமாக சென்று கொண்டு இருந்த சூசனின் வாழ்வில் என்ன நடந்தது? எல்லாமே நிறைவாக சந்தோஷமாக இருந்தாலும், ஏதோ வாழ்வில் திருப்தியாக இல்லையே, என்று யோசித்தார் சூசன். அப்படி என்ன தான் நடந்தது... வாங்க அவங்ககிட்டேயே கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்...

திருமதி சூசன் ஜாஷ்வாவின் வாழ்வில் நடந்த அந்த மறக்க முடியாத சம்பவத்தை உங்களுக்காக தொகுத்து வழங்குகிறோம்...

**உங்க அப்பா, அம்மா பற்றியும் குடும்பம் பற்றியும் சொல்லுங்க...**

நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் நல்ல கிறிஸ்தவ குடும்பத்தில்தான். இயேசுவின் அன்பை அம்மா அப்பா சொல்லிக் கொடுத்து வளர்த்தார்கள். சின்ன வயதிலிருந்தே ஞாயிறு பள்ளி செல்வது, இளம் வாலிபர் ஐக்கியத்தில் கலந்துகொள்வது என்று தேவ பயத்தில் வளர்ந்தேன். பள்ளிப் படிப்பு முடிந்தது. இஞ்சினியரிங் கல்லூரியில் சேர்ந்து பொறியியல் பட்டப்படிப்பையும் படித்து முடித்தேன். வாழ்க்கை சூப்பராக சென்றது.



# என் வலியில் வழியைக் கண்டேன்

**ம்ம்... நல்ல சந்தோஷமான கிறிஸ்தவ குடும்பம்; கல்லூரி படிப்பையும் முடிச்சிட்டீங்க... வாழ்க்கை துணை தேட ஆரம்பிச்சிருப்பார்களே! அது பற்றி சொல்லுங்க...**

நான் இளம் வாலிபர் ஐக்கியத்தில் இருக்கும்போதே எங்கள் வாழ்க்கைத் துணைக்காக ஜெபிக்கும்படி எங்களுக்கு சொல்லிக் கொடுத்தார்கள். அதன்படி தேவனுக்கு பயந்த மகனை திருமணம் செய்ய வேண்டும் என்று ஜெபிக்கத் துவங்கினேன். என் இளம் வாலிப பருவத்தில் நான் ஜெபித்த ஜெபங்கள் வீண் போகவில்லை; தேவனுக்கு பயந்த, தரிசனங்கள் நிறைந்த, நான் விரும்பினதற்கும் ஜெபித்ததற்கும் அதிகமான குணங்கள் உடையவரை தேவன் எனக்கு கணவராகக் கொடுத்தார். திருமண வாழ்க்கையும் சந்தோஷமாக சென்றுக் கொண்டிருந்தது. இரண்டு அழகான பிள்ளைகளையும் கொடுத்து ஆசீர்வதித்தார்.

**இளம் வாலிப பருவத்தில் இருந்தே ஜெபிச்சிருக்கீங்க... தேவனும் உங்கள் ஜெபத்திற்கு பதிலளித்துள்ளார். அப்போ உங்கள் வாழ்க்கையில் என்னதான் தவறவிட்டீர்கள்?**



ம்ம்... சொல்றேன், ஐயோ சொல்ல மறந்துட்டேன். என் திருமணத்திற்கு முன்பு, 2000ம் ஆண்டில் என் பெற்றோர் சகோதரரோடு காரில் சென்று கொண்டிருந்தபோது, கார் டிரைவர் சற்று கண் அயர்ந்த அந்த வினாடி

ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது. எங்கள் கார் ஒரு மரத்தில் நேருக்கு நேர் மோதியது. மரம் வேரோடு சாய்ந்து விழுந்தது. முன் சீட்டில் உட்கார்ந்திருந்த என் சகோதரர் உடனே பிரேக் போட்டு எப்படியோ தடுக்க முயன்றதால் உயிர் பிழைத்தோம். நாங்கள் உயிரோடு மரத்தின் கிளையில் தொங்கிக் கொண்டிருந்தோம். எங்களைக் காப்பாற்ற வந்த கிராமத்து மக்கள் சொன்னது எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது, “இந்த இடத்தில் விபத்து நடந்ததில் யாருமே உயிர் பிழைத்ததே இல்லை”. எப்படியோ தேவ கிருபையினால் அன்று நாங்கள் காப்பாற்றப்பட்டோம். தேவன் என்னை உயிரோடு வைத்திருக்கிறார் என்றால் அதில் நிச்சயம் ஒரு நோக்கம் இருக்கும் என்று அன்றிலிருந்து யோசிக்கத் துவங்கினேன். அதனை எப்படியாவது கண்டுபிடிக்க முயன்றேன். ஆனால் அந்த நோக்கம் என்னவென்று தெரியவில்லை. அதற்குள் என் திருமணம் முடிந்தது.

**விபத்தைப் பற்றி யோசிச்சு கூட பார்க்க முடியல. எவ்வளவு அழகாக ஆண்டவர் உங்களை காப்பாற்றியிருக்காங்க.. சரி உங்க வாழ்க்கைக்கான நோக்கத்தைத் தெரிந்துகொள்ள ஏதாவது முயற்சி எடுத்தீர்களா?**

ஆமா! எனக்கென்று தேவன் என்ன வைத்திருக்கிறார் என்பதை தெரிந்துகொண்டால், என் வாழ்வில் அதனை சிறப்பாக செய்யலாமே, என்று எண்ணி 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நானும் என் கணவரும் என் வாழ்க்கைக்கான நோக்கம் என்ன? நான் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள் தேவனே! என்று 21 நாட்கள் உபவாசித்து ஜெபித்தோம். நாங்கள் எதிர்பாராத விதத்தில் தேவன் எங்கள் ஜெபத்திற்கு பதிலளித்தார்.



**சரி.. எதிர்பாராத விதத்தில் தேவன் பதிலளித்தார் அப்படியென்றால் என்ன நடந்தது? 21 நாட்கள் ஜெபித்திருக்கிறீர்கள்... நோக்கத்தை கண்டுபிடிக்க முடிந்ததா?**

ஆமா, கண்டுபிடித்தோம்... ஆனால் நாங்கள் எதிர்பார்த்த மாதிரி சுலபமான முறையில் அல்ல. 2017ஆம் ஆண்டு துவக்கத்தில் சில சின்ன கட்டிகள் என் தொண்டையில் வந்தது. ஏதோ ஜலதோஷம் என்று புறக்கணித்துவிட்டேன். பிறகு ஏப்ரல் மாதத்திலும் சில கட்டிகள் தொண்டையில் இருப்பதை பார்த்து என் கணவரும், குடும்பத்தினரும் உடனே மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தோம். வேலூர் சி.எம்.சி-க்கு சென்றோம். பரிசோதனைகள் முடிந்தது. Biopsy report negativeவாக இருக்க வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஆனால், நாங்கள் ஜெபித்தபடி எதுவும் நடக்கவில்லை. மருத்துவர்கள் ரிப்போர்ட்டை பார்த்துவிட்டு, இது தைராய்டு கேன்சர் 2வது நிலை என்றவுடன் உடைந்து போனேன். செய்வது அறியாது, கண்ணீர் மல்க CMCயில் என் கணவரோடு நின்று கொண்டிருந்தது இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. வீட்டிற்கு வந்து என் கணவரின் கரங்களை பிடித்து, என் வாழ்க்கைக்கான நோக்கத்தை தெரிந்துகொள்ளாமல் பிள்ளைகளை இப்படியே விட்டு விட்டு மரிக்க நான் ஆயத்தமாக இல்லை என்று அழுதேன். இந்த வலிக்கு பின்னால் ஒரு நோக்கம் இருக்கிறது என்ற நம்பிக்கை இருந்தது. அதற்கு பிறகு அழவில்லை, பயமும் இல்லை.



**ஐயோ, நீங்க ஜெபித்தது ஒன்று, பதில் கிடைத்தது வேறொன்று... கேட்கவே மிகவும் கஷ்டமாக இருக்கு. அப்புறம் என்ன நடந்தது? சிகிச்சைகள் தொடர்ந்ததா?**

அடிக்கடி CMCக்கு சென்றோம். நல்ல அறுவை சிகிச்சை நிபுணரிடம் தேவன் எங்களை வழிநடத்தினார். தொண்டையில் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்தார்கள். ஒருவேளை ஏதாவது சிறிய சிக்கல் ஏற்பட்டிருந்தால் கூட Vocal Cords damage ஆகி என்னால் பேசியிருக்க முடியாது. ஆனால் அப்படி எதுவும் ஆகாமல் தேவன் என்னை பத்திரமாக பாதுகாத்தார். இந்த அறுவை சிகிச்சையின் போது தான் மருத்துவர்கள் கேன்சர் செல்கள் ஏற்கெனவே கழுத்துப் பகுதியிலும் மற்ற சில பகுதிகளி

லும் பரவி இருப்பதைக் கண்டறிந்தனர். எனவே அறுவை சிகிச்சைக்குப் பிறகு கதிரியக்க சிகிச்சைக்கு (Radiotherapy) செல்ல வேண்டியதிருந்தது.

## அறுவை சிகிச்சைக்குப் பின் என்ன நடந்தது?

Mixed emotionsயில் இருந்தேன். மருத்துவமனை அறையில் தனியாக இருப்பது அவ்வளவு சுலபம் அல்ல. ஆனாலும் என் மனதை திடப்படுத்திக் கொண்டேன். அறுவை சிகிச்சை முடிந்து ஒரு மாதத்திற்குப் பிறகு, என்னுடைய அடுத்த கதிரியக்க சிகிச்சைக்காக தயாரானேன். விசுவாசத்தோடு ஜெபித்தோம். சில ஊழியர்களும் ஜெபித்தார்கள். இந்த கதிர்வீச்சு சிகிச்சையை துவங்குவதற்கு முன் PET Scan என்று ஒரு ஸ்கேன் எடுப்பார்கள். இதில் எங்கெல்லாம் கேன்சர் செல்கள் பரவி இருக்கிறது என்பதைக் கண்டறிய முடியும். ஆனால் அந்த ஸ்கேன் எடுப்பதற்கான நேரம் நீண்டுக் கொண்டே போனது. என்ன நடந்துக் கொண்டிருக்கிறது என்ற பதற்றமும் என்னில் அதிகரித்தது.

## உங்கள் மனதில் என்னவெல்லாம் ஓடிக் கொண்டிருந்திருக்கும் என்று புரிகிறது... ஸ்கேனிற்கு பிறகு மருத்துவர்கள் என்ன சொன்னார்கள்?

பதற்றத்தோடு மருத்துவரை சந்தித்தோம். அவர்கள் ஆச்சரியத்தோடு எங்களைப் பார்த்து, உங்கள் முழு சரீரத்தையும் ஸ்கேன் செய்து பார்த்ததில் கேன்சர் செல்களைப் பார்க்க முடியவில்லை. கழுத்து பகுதியிலும் இல்லை; தழும்புகளும் இல்லை என்றார்கள். ஆம், தேவன் என்னை சுகப்படுத்தினார். புற்றுநோயிலிருந்து பூரண சுகத்தைக் கொடுத்து 2 ஆண்டுகள் ஆகிறது. கதிரியக்கம் எதுவும் இல்லாமல் சந்தோஷத்தோடு அன்று இரவே வீடு திரும்பினோம். மருத்துவர்களே, இது தேவனுடைய செயல், அற்புதமாக சுகம் பெற்றிருக்கிறீர்கள் என்றனர். தேவனுக்கே மகிமை!




## எவ்வளவு பெரிய அற்புதம்... ஓகே... உங்களுடைய அந்த ஜெபத்திற்கு தேவன் பதிலளித்தாரா?

ம்ம்... பதிலளித்தார். இந்த சிகிச்சையின் போது கேன்சரினால் பாதிக்கப்பட்ட பலரின் வேதனையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அவர்கள் சந்திக்கும் வலியைவிட நான் இறந்துவிட்டால் என் பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகும் என்ற பயமும் வலியும் அவர்களுக்குள் இருப்பதை புரிந்துகொண்டேன். இந்நிலையில் தேவனுக்கு நன்றி செலுத்தி நாங்கள் ஜெபிக்கும்போது, "CHRISTCAN" என்னும் வார்த்தையை தேவன் தீர்க்கதரிசனமாக எங்களுக்குக் கொடுத்தார். இதில் கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்டு, பெற்றோர் மரித்திருப்பார்களானால் அந்த அப்பாவோ, அம்மாவோ பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விகுறியாகாமல் அவர்களுடைய படிப்பு மற்றும் தேவைகளையும் சந்திப்பதே இந்த கிறைஸ்ட்கேன்னின் நோக்கம். இதனை நிறுவுவதே என் வாழ்வின் நோக்கம் என்பதை தேவன் எனக்கு இந்த வலியின் பாதையில் புரிய வைத்தார். இன்று 12 பிள்ளைகளுக்கு உதவுகிறோம். அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை அமைத்து தர விரும்பி திட்டமிட்டு செயலாற்றுகிறோம். இவர்களுடைய பெற்றோர்களில் ஒருவர் கேன்சரில் மரித்து விட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## சரி இதை வாசிக்கும் வாலிபர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

வாழ்க்கையின் கடினமான பாதையின் வழியே செல்லும்போது, மனஅழுத்தம் உங்களை அமிழ்த்த நினைக்கும்போது, ஏன் என் வாழ்க்கையில் இவ்வளவு பெரிய வலி என்று யோசிக்கிறீர்களா? இதை மறந்து விடாதீர்கள்...

நீங்கள் செல்லும் அந்த வனாந்திரமான பாதையில் இயேசு உங்களோடு இருக்கிறார் அவருடைய வார்த்தையில் நிலைத்திருங்கள். "ஏன் எனக்கு" என்று கேட்காமல், "இதன் மூலம் என்ன செய்ய விரும்புகிறீர் தேவனே" என்று கேட்டுப் பாருங்கள் வாழ்க்கையின் பயணம் இன்னும் சுவாரஸ்யமாக இருக்கும்!

**இதை வாசித்துக் கொண்டிருக்கும் வாலிபர்களே! தேவன் உங்களை ஒரு நோக்கத்தோடு சிருஷ்டித்துள்ளார். கஷ்டமான, சோர்வான பெலவீனமான நேரங்கள் நிலையானது அல்ல. உங்கள் வாழ்க்கைக்காக தேவன் வைத்திருக்கும் திட்டமே நிலையானது. மறந்துவிடாதீர்கள்! உங்கள் வாழ்க்கை அநேகரை ஆசீர்வதிக்கப் போகிறது!!** ●

ரவி

# இது முடிவு அல்ல...







**ஆண்டு பொது தேர்வின் முடிவுகளுக்காக எதிர்பார்த்திருக்கும் அன்புக்குரிய தம்பி தங்கைகளுக்கு ஒரு சில ஆலோசனைகள்...**

தேர்வுக்காக பல மாதங்களாக உங்களை ஆயத்தப்படுத்தி இரவு பகல் என்று பாராமல் முழுமுனைப்போடு முயற்சி செய்த நீங்கள் ஒவ்வொருவரும் பாராட்டுக்குரியவர்கள் தான். உங்களில் சிலர் தேர்வு முடிவுகளை குறித்து மகிழ்ச்சியாக இருக்கலாம், வேறு சிலர் பயத்தோடும் பதற்றத்தோடும் என்ன செய்வேன் என்று கலங்கலாம்.

ஒருவேளை, நீங்கள் எதிர்பார்த்ததைவிட குறைவான மதிப்பெண்கள் பெறவோ இல்லையென்றால் ஏதாவது பாடத்தில் தோல்வியுறவோ நேர்ந்தாலும் கூட, நீங்கள் சோர்ந்து போய் வாழ்வில் நம்பிக்கை இழக்கக் கூடாது. ஏனென்றால், உங்கள் எதிர்காலம் நீங்கள் வாங்கும் மதிப்பெண்களில் அல்ல, மாறாக தேவனுடைய கரத்தில் உள்ளது.

இன்னும் கொஞ்சம் முயற்சி செய்திருந்தால் அதிக மதிப்பெண்களைப் பெற்றிருக்கலாமே என்கிறதான உங்களுடைய ஏக்கம் எதார்த்தமானதுதான். இதற்கு மேல் இப்படி எண்ணுவதால் உங்களுக்கு எந்த நன்மையும் இல்லை. வருத்தப்படாமல் தேவன்மேல் விசுவாசம் வைத்து தைரியமாக உங்கள் எதிர்காலத்தை அணுகுங்கள். ஐயோ! இனி எனக்கு எதிர்காலமே இல்லை என்று உங்கள் உள்ளத்தில் கொண்டு வரும் சாத்தானின் பொய்யான எண்ணங்களுக்கு செவிகொடுக்காதீர்கள்.

மேடம் மேரி க்யூரி அநேகப் பாடுகளுக்கு பிறகு கதிரியக்கத் தத்துவத்தை வடிவமைத்தார். தாமஸ் ஆல்வா எடிசன் அநேக ஏமாற்றங்களுக்குப் பிறகு ஒளி மற்றும் ஒலி-யில் சாதனைகளைப் படைத்தார்.

வேதத்தில் பார்ப்போமானால், பேதுருவுடைய வாழ்க்கையிலும் ஒரு பரீட்சை வந்தது. மூன்று முறை இயேசுவை மறுதலிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார். நம்முடைய பார்வையில் பேதுரு அந்த விசுவாச பரீட்சையில் தோற்றுப் போனார். தேவனுக்கோ அது எந்த ஆச்சரியத்தையும் கொடுக்கவில்லை. அதே நேரத்தில் “நீ என்னை மறுதலித்தாய் அல்லவா?” என்று சொல்லி, பேதுருவின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. மாறாக அப்போஸ்தலர்களின் தலைமை அப்போஸ்தலனாக அவரை நியமித்தார்.

இந்த உலகம்தான் நாம் வாங்கிய மதிப்பெண்கள், நம்முடைய திறமைகள், நம்முடைய குடும்பப் பின்னணி இவற்றையெல்லாம் வைத்து நம் எதிர்காலத்தை எடைபோடும். தேவன் அப்படி அல்ல, நீ அவருடைய உன்னதமான படைப்பு! உன்னைக் குறித்து எல்லாம் அவருக்குத் தெரியும்.

தோற்றுப் போனாள் என்று எண்ணப்பட்ட அன்னாளின் வாழ்க்கையில் தேவன் ஜீவனை கட்டளையிட்டார். பெலவீனமான எஸ்தரைக் கொண்டு ஒரு தேசத்தையே இரட்சிக்க முடியுமானால் உன்னைக் கொண்டும் செய்ய முடியும்.

உன் பெலன், பெலவீனம், ஆற்றல், திறன் எல்லாமே அவருக்குத் தெரியும். உன்னை அவர் தவறுதலாகவோ, கைப்பிசகாகவோ படைக்கவில்லை. பூரண நோக்கத்தோடு படைத்திருக்கிறார். என் அன்பு தம்பி, தங்கையே, தேவனால் எல்லாம் கூடும். அவருடைய அன்பு பிள்ளைகளாகிய உங்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும். ஆகவே, இந்த மொத்த உலகமே நீங்கள் எடுத்த மதிப்பெண்களின் நிமித்தம் உங்களை இழிவாகப் பேசினாலும், மனம் தளராமல் அவை ஒன்றுக்குங்கூட நீங்கள் செவிகொடாமல், தைரியமாக மார்தட்டி உலகத்தையும், சாத்தானையும் பார்த்து, “என் எதிர்காலம் நான் எடுத்த மதிப்பெண்களில் இல்லை, மாறாக என் தேவனுடைய கரத்தில் உள்ளது” என்று தைரியமாக சொல்லுங்கள். தேவனுடைய காருண்யம் உங்களை வழிநடத்தும்! உயர்த்தும்! பெலப்படுத்தும்!! ●







வாலிபர்கள்
தங்களுடைய
ஆவிக்குரிய வாழ்வில்
அனல்கொண்டு
எழும்பவும், வேதத்தின்
ஆழமான இரகசியங்களை
அறியவும், தங்கள்
தேசத்திற்காய் கூடி ஜெபித்து
பெலப்படும் ஓர் இடமாகவும்
சினெர்ஜியா கூடுகை அமைகிறது.
நீங்களும் இக்கூடுகையில்
பங்குபெற்று பெலன் அடையலாமே!
உன்னை பெலப்படுத்திக் கொண்டு,
பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு!
ஆயத்தப்படுத்து!!







நீங்களும் உங்கள் நண்பர்களோடு பங்குபெறுங்கள்!

**1st SUNDAY** (5th May)

VELLORE (3 PM):
Immanuvel Complex, Viruthampet, Near Ambedkar Statue, Vellore. 9442885315 | 9786379556

JEBAMALAI (2 PM) Kadaiyam (via), Keelamathapuram, (Tirunelveli Dist). 8300131000 | 9750955548

TIRUPUR (4PM - 6:30 PM)
Jesus Redeems Branch Office, No:62 2nd Floor, Benny Kumar Main Road, Tirupur -01. 9750955549

BENGALURU (4PM - 6PM)
Steve's Gym, HBR. Layout 3rd Block, (Near Jesus Calls). 9791444788

KULAMANICKAM
(10:30AM - 12 PM)
Jesus the Way AG Church, Adaikkalapuram, Ariyalur Dt. 9750955548 | 9442855315

SIVAKASI (3PM - 5:30 PM)
Jesus Redeems Gethsemane Prayer House, HOREB Complex, 1st Floor, No 1292B PKN Road (Rathna Vilas Stop). 9750955548, 9442906567, 9442842315.

TIRUPATI (3PM) :
Old Community Hall, West Church. 9985033401 | 9442885315

**2nd SATURDAY** (11th May)

MADURAI (4:30 - 6:30PM)
Thomas Tution centre Hall Opp. to Reliance Petrol Bulk, Pasumalai.
7598155502 | 9750955548

OOTY (10AM - 1:00PM)
YWCA Chapel, Anandagiri.
9750955549

**2nd SUNDAY** (12th May)

AMBUR (3PM - 6PM)
Concordia Hr.Sec.School, Opp Rly. Station,
9597927799 / 9442885315

SATHANKULAM (3.00 PM)
Carmel Stores 2nd Floor Opp Bus Stand,
9750955548 | 9442842315

THANJAVUR (3:00PM)
Jesus Redeems Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9750955548

USILAMPATTI (3:00PM)
Arputha Jeba Maiyam,
Opp TELC School 7598155502.

MARTHANDAM (4.30 PM),
H.M.S.Century Hall,
Behind C.S.I. Church,
(opp. P.P.K. Hospital)
9865189883

MUMBAI (5PM - 7:30PM)
Bright High School, Village Road, Bhandup(W), Mumbai - 400078 (Near Nahur Rly. station),
9004882470 | 8082410410

PAVOORCHATRAM (2:30 PM)
KTC Nagar CSI Christ Church
9750955548, 9994436722,
9842166406

POLLACHI (3:30 PM - 6 PM)
Balamurugan A/C Mahal,
Coimbatore Road,
Near Amuthasurabi Hotel.
9750955549 | 9486037586

KOVILPATTI (2:30PM - 5.30PM)
St. Paul's Matriculation School,
Kovilpatti
9750955548 | 9787322334

VILLUPURAM (3 - 6PM)
SAP Mahal 1st Floor, Opp. Petrol Bunk, Old Bus Stand
8344411022 | 9442885315

*Together we grow in the likeness of Christ!*

## 3rd SUNDAY (19th May)

TIRUNELVELI (3:30 PM)
The Deaf & Dumb School,
(opp- Central Jail) Palayamkottai.
9750955548 | 9488212915

CHENNAI (3.30PM)
VGP Victory House,
Mount Rd. 9442 885315

COIMBATORE (4PM )
Jesus Redeems Branch Office
Gethsamane Prayer Center,
No:90,1st, Floor Arts College Rd.,
Near Charan Tower, Coimbatore
0422 - 2309040 | 9750955549

TRICHY (3PM)
22A, Ist Floor, Thennur High Rd.,
Near KMC Bus Stop, Thennur,
Trichy - 620017. 9750955549

NALUMAVADI (2.30PM)
Tabernacle of God, Nalumavadi,
Thoothukudi Dt. 9750955548 |
9442842315 | 04639 - 220022

NAGERCOIL (4 PM)
Jehova Salvation Church,
369C, Derik Junction.
9865189883 | 7598155503

CUDDALORE (3PM - 6PM)
Jesus Redeems Branch Office,
Chellakuppam (Old Town)
9965144000 | 9442885315

MUMBAI (5PM - 8PM)
Bethel, MithChowky Lane Near Girdhar Park, Marve Road,
Malad -W. 9004882470 |9664050567

DINDIGUL (3PM - 5:30 PM)
Jesus Redeems Gethsemane Prayer Center, No.37H/69,
Scheme Road, Nagal Nagar.
7598155502 | 9750955548

## 4th SUNDAY (26th May)

TUTICORIN (3PM - 5.30PM)
Suganthi Nursing Home
Prayer Hall, Near Jesus Redeems Branch Office, 77 V.E Road,
Opp to Holy Convent
9750955548 | 8344116000 9442842315

PONDICHERRY (3PM - 6PM)
Hallelujah A.G. Church,
Thennan Salai Road,
8344433800 | 9787339422

THIRUVALLUR (2.30PM - 5 PM)
Jesus Redeems Branch Office
HSR Tower (Near Gowdi Church)
Theradi, Thiruvallur. 9442885315

MUMBAI (5PM - 7.30PM)
Dharavi 09004882470 | 8082410410

ERODE (4 PM - 6:30 PM)
Jesus Redeems Branch Office,
No:216, Ist Floor Near Fire Service,
Gandhiji Road, Erode - 1. 9750955549

SURANDAI (2.30PM)
Jawarhalal Middle School,
Surandai. 9443962141 | 9750955548
9442842315

TIRUVANNAMALAI (4PM- 6PM)
Leebanon Bungalow, Vettavalam Rd.,
Bypass Road Corner
9865553420 | 9789004627

THENI (2.30PM - 5 PM):
Jesus Redeems Branch Office,
No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor,
7598155502 | 9976766422

PERNAMBUT (3 PM - 6 PM):
Revival Prayer Tower,
V. Kotta Road, Pernambut,
Vellore Dist. 99408 54125 | 9442885315



இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம்
சனிக்கிழமை
(10:30 PM)

வாலிபர்களே!
உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்!
இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!
9750955547

ரெக்ஸ் கிளமெண்ட்

# சுதாரித்தான் சுரேஷ்

சுரேஷ் வழக்கம்போல தன் அலுவலக வேலைகளை முடித்துவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டான். கறுப்புநிற கார் மெதுவாக அதிர்ந்தபடி அவன் வீட்டை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது.

சுரேஷ், அண்ணா பல்கலைகழகத்தில் UG, PG எல்லாம் முடித்து வெளிநாட்டில் MBA முடித்துவிட்டு, சென்னையில் மிகப்பெரிய IT நிறுவனத்தில் Chief Technical Officerஆக வேலை செய்தான். கை நிறைய சம்பளம், அழகான மனைவி, OMRல் சொந்த வீடு, அதோடு கூட சுரேஷ் கடவுளுக்கு பயந்து வாழ்பவனாகவும் இருந்தான்.

படகுபோல் மிதந்து வந்த கார் வீட்டை அடைந்திருந்தது. காரை தன் அழகிய Duplex வீட்டின் போர்டிகோவில் நிறுத்திவிட்டு, வீட்டின் கதவில் இருந்த மின்னணு பூட்டை பாஸ்வேர்டு போட்டு திறந்து உள்ளே வந்தவன்... மல்லிகா, மல்லிகா என அழைத்துக் கொண்டே வரவேற்பறையை கடந்து மாடிப்படி ஏற நினைத்தான்...



என்னைக்கும் இல்லாம இன்னைக்கு சீக்கிரம் வந்திட்டீங்க? என கேட்டுக் கொண்டே மல்லிகா மாடிப் படியிறங்கி வந்து கொண்டிருந்தாள். அவள் வயிற்றை பிடித்துக் கொண்டு இறங்கும்போதே, 6வது மாதத்தின் சோர்வும், இளைப்பும் அவள் முகத்தில் சற்று தெரியவே செய்தது.

என்னங்க, கீழேய இருங்க, டீ போட்டு தர்றேன் என மல்லிகா சொல்ல, சுரேஷ் Okay என சொல்லிவிட்டு அந்த அகன்ற சோபாவில் அமர்ந்து டி.வியை ஆன் செய்தான். சிறிது நேரத்தில் டீ போட்டுக் கொண்டு சுடசுட மிளகாய் பஜ்ஜியும், டீயும் சுரேசுக்கு கொடுத்தாள்.

சுரேஷ் டிவியை பார்த்துக் கொண்டே பஜ்ஜியை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வரவர இந்த தோனி நல்லாவே ஆட மாட்டேன்கிறான். CSK ஊத்திகிட்டு இருக்கு என தானாகவே பேசினவனைப் பார்த்து, என்னங்க எங்கம்மா போன் பண்ணினாங்க... என மல்லிகா கூறினாள்... அப்படியா! என்ன சொன்னாங்க? என டிவியைப் பார்த்துக் கொண்டே கேட்டான்... வந்ததும் வராததுமா டிவியா? மொதல்ல அதை off பண்ணுங்க... என ரிமோட்டைப் பிடுங்கி off செய்தாள்.

சுரேஷ் சிரித்தவாறே... டீயை குடித்துக் கொண்டே, மல்லிகா உன்னை மாதிரி யாரும் மொறுமொறு என பஜ்ஜி செய்ய முடியாது என்றான். ஆமா பேச்சை மாத்தாதீங்க... சரி உங்கம்மா என்ன சொன்னாங்க? என சுரேஷ் கேட்டான்... ஒண்ணுமில்லை அடுத்த மாசமே உன்னை வந்து பிரசவத்திற்கு கூட்டிக்கிட்டு போகட்டுமா? என கேட்டாங்க...

நா... நா.... முடியாது என சொல் லிட்டேன்... எதற்கும் மாப்பிள்ளையை கேட்டு சொல் என சொன்னாங்க என்றாள்... சரி, நீ என்ன நினைக்கிற? எனக் கேட்டான்... 2 மாதம் கழிச்சு போலான்னு தான் நினைக்கிறேன், ஆனா அம்மா ரொம்ப Compel பண்றாங்க என்றாள்.

ஆமா மல்லிகா நானும் அடுத்த மாதம் கனடாவுக்கு offshore projectக்காக போறேன். வருவதற்கு மூன்று மாதம் ஆகும், அதனால அடுத்த மாசமே

தான். முகம் தெரிந்தவர்கள், முகம் தெரியாதவர்கள், சில Mutual friends என 500க்கும் அதிகமான Friend request இருந்ததை பார்த்து ஒவ்வொன்றாக accept செய்து கொண்டே வந்தான். அப்படி செய்து கொண்டிருந்தபோது, ஒரு குறிப்பிட்ட profile படம் பார்த்து தன் விரலை நிறுத்தினான். அந்த படம் அவனுக்கு நன்கு பரிச்சயமான படம். மெல்ல அந்த படத்தை click செய்து அந்த FB profileஐ ஆராய்ந்தான். சுரேஷின்

போது, ஒருவரையொருவர் நேசிக்க தொடங்கினர்.. இருவரும் காலஜே் நேரம் போக பல இடங்களில் சந்தித்து பழகினர். நான்காம் வருடம் படிக்கும்போது, சித்ராவின் வீட்டில் இவர்கள் பழக்கத்தைப் பற்றி தெரியவர... சித்ராவின் அப்பா கடுமை யாக எதித்தார்...

சுரேஷ் கடந்த காலத்து நினைவுகளைப் பற்றி அசைபோட்டுக் கொண்டிருந்த போது, சுரேஷின் மொபைல் Notification ஒலித்தது. மொபைல் போனை

**சுரேஷ் அப்படியே சோபாவில் சாய்ந்த படி, கண்களை மூடி 8 வருடத்திற்கு முன்பு தன் கல்லூரி வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத இதய நினைவுகளை நினைக்கத் தொடங்கினான்**







உன்னை வந்து கூட்டிகிட்டுப் போகச் சொல்லு... நம்ம சொந்தக்காரங்களை மட்டும் கூப்பிட்டு Baby shower function நடத்தி முறைப்படி உன்னை அனுப்பிவைக்கிறேன். எங்க அம்மா அப்பா இருந்திருந்தா சந்தோஷப்பட்டிருப்பாங்க என்றான்.... மல்லிகா மெல்ல சுரேஷின் கையை தொட்டு ரொம்ப feel பண்ணாதீங்க. நம்ம பையன் பிறந்து ஒரு மாசத்துல வந்திடுவேன்... என்று செல்லமாக கூறிவிட்டு மறுபடியும் மாடிக்கு சென்று விட்டாள்.

சோபாவில் படுத்திருந்த சுரேஷ் தன் மொபைல்போனை கையில் எடுத்து, ஃபேஸ்புக் திறந்து ஒவ்வொரு postஆக பார்த்துக் கொண்டிருந்தான். அன்றைய post எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, Friend request பக்கம் கிளிக் செய்

மனதிற்குள் வித்தியாசமான உணர் வலைகள் மிதக்க ஆரம்பித்தது. அந்தப் படம் தன் வாலிப வயதில் நெருக்கமாக பழகின சித்திராவின் profile என கண்டுபிடித்தான்.

Lives in Canada என பார்த்தான்... மெல்ல தயங்கினவனாக சித்ராவின் Friend request-யை accept செய்தான்.

சுரேஷ் அப்படியே சோபாவில் சாய்ந்த படி, கண்களை மூடி 8 வருடத்திற்கு முன்பு தன் கல்லூரி வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத இதய நினைவு களை நினைக்கத் தொடங்கினான்.

சுரேசும், சித்ராவும் அண்ணா பல்கலை கழகத்தில் ஒன்றாகப் படித்தார்கள்... சித்ராவும் ஒரு கிறிஸ்தவப் பெண்... இருவரும் 3ஆம் ஆண்டு படிக்கும்

எடுத்துப் பார்த்தான்... Messengerயில் சித்ரா Hi என text செய்திருந்தாள்... Thanks Suresh for accepting my friend request, How are you? என மறுபடியும் text செய்திருந்தாள்.

சுரேஷ் தயக்கத்துடன், அனேக வருடங் களுக்குப் பிறகு சித்ராவுடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்தான். Hi Chitra, I am doing good, How about you? என சுரேஷ் text செய்தான். சுரேஷ் மனதிற்குள் பல நூறு பட்டாம் பூச்சிகள் பறப்பதைப்போல் உணர்ந்தான்.

இரவு மணி 9 ஆகியிருந்தது... என்னங்க... என்ன செய்றீங்க?... சாப்பிடலாமா? என்றாள் மல்லிகா. தான் கடந்த 2 மணி நேரமாக சித்ரா வுடன் text செய்து கொண்டிருப்பதை அப்போது தான் சுரேஷ் உணர்ந்தான். மல்லிகாவின் குரல் கேட்டு சுரேஷ்

Messengerயில் Bye என text செய்துவிட்டு எழுந்தான். என்னங்க.... நீங்க டீவியும் பார்க்கல, அமைதியா என்ன பண்ணிகிட்டு இருந்தீங்க என கேட்டாள் மல்லிகா.

ஒண்ணுமில்ல மா, Office mail check பண்ணிகிட்டு இருந்தேன் என சுரேஷ் பொய் சொன்னான். சுரேஷ் சிறிது நேரத்தில் தன் மொபைல் ஃபோன் எடுத்து, புதிதாக pattern lock போட்டான்.

டிரஸ் மாற்றிவிட்டு டைனிங் டேபிளில் சுரேஷ் அமைதியாக உட்கார்ந்து சிக்கன் நூடுல்ஸ் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். எதிரே இருந்த மல்லிகா... சுரேஷைப் பார்த்து என்னங்க அமைதியா சாப்பிடுறீங்க? ஆபீஸ்ல ஏதாவது பிரச்சனையா? எனக் கேட்டாள்... இல்லம்மா ரொம்ப சோர்வாக இருக்கு என வேகமாக சாப்பிட்டுவிட்டு, மாடியில் உள்ள படுக்கை அறைக்குச் சென்றான்.

மல்லிகா வரும்வரை மறுபடியும் Facebook messenger திறந்து பார்த்தான். சித்ரா இன்னும் ஆன்லைனில் இருப்பதை கவனித்தான். சித்ரா தன்னுடைய கனடா மொபைல் நம்பரை text செய்திருந்தாள். சுரேசும் தன் மொபைல் எண்ணை சித்ராவுக்கு text செய்தான். சில நொடிகளில் whatappல் Hi Suresh என சித்ரா text செய்திருந்தாள்.

சித்ராவின் பெற்றோர் இவர்களின் காதலை கடுமையாக எதிர்த்தாலும் சுரேசும் சித்ராவும் இறுதி ஆண்டு படிக்கும்வரை ரகசியமாக சந்தித்து பழகினர். ஆனால் பொறியியல் இறுதி ஆண்டு முடித்த பிறகு சித்ராவை சுரேஷ் சந்திக்கவே இல்லை... அவளிடமிருந்து எந்தவித தொடர்பும் இல்லை. Graduation functionக்கு கூட சித்ரா வராததால் சுரேஷ் அப்படியே உடைந்து போனான்.

சில நாட்கள் கழிந்து, சித்ராவுக்கு அவசர திருமணம் முடிந்துவிட்டது என்பதை சுரேஷ் சித்ராவின் தோழி மூலம் கேள்விப்பட்டான். அவள் பெற்றோர் அவளைக் கட்டாயப்படுத்தி வெளிநாட்டில் உள்ள மாப்பிள்ளைக்கு மணம் முடித்து அனுப்பி விட்டனர்.

படுக்கையில் கிடந்த சுரேஷ் மெல்ல கண்கலங்க ஆரம்பித்தான். காலங்கள் கடந்து போனாலும்... அவன் இதயத்தில் பதிந்திருந்த நினைவலைகள் அவனை என்னவோ செய்தது...

மறுபடியும் சுரேஷ் whatsapp எடுத்துப் பார்த்தான். How is your wife? Do you have Children? என சித்ரா text செய்திருந்தாள். சுரேஷ் பதிலுக்கு Yes Malliga is fine. She is carrying 6 months. என text செய்தான்.

Oh Congrats Suresh... I am in Canada with my daughter... she is 4 years old என சித்ரா text செய்தாள். How is your husband? என சுரேஷ் கேட்டான். சிறிது நேரம் சித்ராவிடம் இருந்து பதில் வரவே இல்லை. ஆனால் அவள் ஆன்லைனில் இருப்பதை சுரேஷ் கவனித்தான்... மல்லிகா மாடிப்படி ஏறிவரும் காலடி சத்தம் கேட்டு சுரேஷ் வேகமாக logout செய்துவிட்டு மொபைல் போனை தலையணைக்கு அருகில் வைத்தான். படுக்கை அறைக்கு வந்த மல்லிகா, சுரேஷ் தூங்கிக் கொண்டிருப்பதை பார்த்து தனி ஜெபம் செய்து விட்டு தூங்க ஆரம்பித்தாள். நடு இரவு 1:00 மணிக்கு சுரேஷ் மீண்டும் மொபைல் போனை எடுத்து whatsapp திறந்தான்... சித்ரா text செய்திருந்தாள். Suresh, my husband passed away last year in an accident என்பதை படித்தான். மெல்ல போனை கையில் எடுத்துக் கொண்டு, கதவை சாத்திவிட்டு படிக்கட்டில் உட்கார்ந்து சித்ராவுக்கு whatsappல் call செய்தான். இருவரும் தேம்பி தேம்பி அழுதனர்.

**படிக்கட்டில் உட்கார்ந்து சித்ராவுக்கு whatsappல் call செய்தான். இருவரும் தேம்பி தேம்பி அழுதனர்**



காலையில் சிவந்த கண்களோடு எழுந்த சுரேஷ் முகம் கழுவிவிட்டு கீழே இறங்கினான். என்னங்க என்னைக்கும் இல்லாததுபோல இன்னிக்கு 10 மணிக்கு லேட்டாக எழுந்திருக்கீங்க?... ஆமா கொஞ்சம் தலைவலி... எனக்கு கொஞ்சம் strongஆ காஃபி கொடு என்றான்.

மல்லிகா கொடுத்த காஃபியை சுரேஷ் குடித்துவிட்டு, வேகமாக புறப்பட்டு, டைனிங் டேபிளில் இருந்த டிபனை அரைகுறையாக சாப்பிட்டுவிட்டு வெளியே புறப்பட்டான்...

என்னங்க... இன்னிக்கு சனிக்கிழமை லீவு... எங்கே புறப்பட்டீங்க? என கேட்டாள்.... ஆபீஸில் அவசர வேலை என பொய் சொல்லிவிட்டு சுரேஷ் ஒரு அமைதியான coffee shop சென்று மறுபடியும் whatsappஐ திறந்தான்.

சுரேஷ் சித்ராவுடன் whatsappயில் பேசுவதும், text பண்ணுவதுமாக சிறிது நாட்கள் தொடர்ந்தது. தான் கனடாவுக்கு offshore projectக்காக

வருவதை சித்ராவிடம் சுரேஷ் தெரி வித்தான். சித்ரா சந்தோஷமாக welcome என்றாள்....

ஒரு மாதம் கழிந்தது... மல்லிகாவுக்கு Baby shower கூடுகை சிறப்பாக நடைபெற்றது. மல்லிகாவின் பெற்றோர் அவளை தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்ல ஆயத்தமாயினர்.

மல்லிகா சுரேஷின் கையைப் பிடித்து, என்னங்க 3 மாதம் கனடா போகப் போறீங்க, என்னை மறந்திட மாட்டீங்களே? தினமும் போன் பிடுங்கி எறிவதா என அவன் இதயம் குழம்ப ஆரம்பித்தது. "பழைய பாவ ஆசை வருகுதோ" என எப்போதா அவன் பாடகர் குழுவில் பாடிய வரிகள் மின்னலாய் இதயத்தில் ஒருமுறை ஒளிர்ந்தது. சிறிது நேரத்தில் அப்படியே முழங்கால்படியிட்டு ஜெபிக்க ஆரம்பித் தான். இடைவிடாது சிறிது நேரம் போராடி ஜெபித்துக் கொண்டிருந்தான். ஆண்ட வரே இந்த சோதனையில் இருந்து என்னை விடுவியும், காப்பாற்றும் என்று ஜெபித்தான். பின்னர் வேதத்தை எடுத்து படிக்க ஆரம்பித்தான்.

அதிகாலை 2 மணிக்கெல்லாம் ஏர்போர்ட் செல்ல வேண்டிய சுரேஷ் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தான். Alram பல முறை ஒலித்துக் கொண்டி ருந்தது. 4 மணிக்கு மல்லிகா சுரேசுக்கு போன் செய்தாள்... சுரேஷ் போனை எடுத்து ஹலோ என்றான்... ஹலோ என்னங்க check in பண்ணிட்டீங் களா? என கேட்டாள்... இல்ல மாலை 6 மணிக்கு தான் Flight என்றான். ஏன் flight cancelஆ என சித்ரா கேட்டாள்.

இல்ல கனடாவிற்கு பதில் லண்டனுக்கு போறேன்... நேத்து இரவே என்

**Facebookல் சித்ராவை unfriend செய்தான்... சித்ராவோடு செய்த whatsapp chat எல்லாவற்றையும் delete செய்து விட்டு, சித்ராவின் நம்பரை Block செய்தான்**







பண்ணுங்க என்றாள்... அட நீ வேறே... 3 மாதம் மின்னலைப்போல ஓடிவிடும்.... என் சிங்கக் குட்டியைப் பார்க்க சீக்கிரம் பறந்து வருவேன் என்றான்... நிச்சயமா? என மல்லிகா கேட்டாள்... நிச்சயம் மல்லிகா உன் டெலிவரி நேரத்தில உன்னோடே நான் இருப்பேன் என்றான். மல்லிகா கண் கலங்கியபடியே விடைபெற்றுச் சென்றாள்.

அதிகாலை 5 மணிக்கு விமானம்... இரவு முழுவதும் சுரேஷ் தூங்க முடி யாமல் தவித்தான்... Happy to meet you soon at Canada... என சித்ரா whatsappல் text செய்திருந்தாள். அதே நேரத்தில் மனைவி மல்லிகாவும் Hi pa meet u soon என Text செய்தி ருந்தாள்... வறண்ட நிலத்தில் புதை யுண்ட விதைகள் மழை பொழிந்து முளைப்பதைப்போல பழைய நினைவு களால் கிளர்ந்தெழுந்த தன் புதிய செடிக்கு தண்ணீர் வார்ப்பதா அல்லது

**வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னை காத்துக் கொள்வதினால்தானே. நான் உனக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்** என்ற தேவ வசனம் அவ னுக்குள் ஆழமாக கிரியை செய்தது.

சுரேஷ் ஒரு முடிவு எடுத்தவனாக தன் மொபைல் போனை எடுத்து Face bookல் சித்ராவை unfriend செய் தான்... சித்ராவோடு செய்த whatsapp chat எல்லாவற்றையும் delete செய்து விட்டு, சித்ராவின் நம்பரை Block செய் தான். தன் மொபைல் போனில் இருந்த pattern lockஐ delete செய்தான். அப்பொழுது தான் அவனுக்குள் இனம்புரியாத தேவ சமாதானம், இறங்கியதை சுரேஷ் உணர்ந்தான்.

bossக்கு request பண்ணி, அதே projectஐ எங்கள் லண்டன் கம்பெனிக்கு மாற்றிக் கொண்டேன். என சுரேஷ் கூறினான். மல்லிகா ஆச்சரியப்பட்டு, சரி ரெஸ்ட் எடுங்க எனக் கூறி ஃபோனை கட் செய்தாள். ஏற்கெனவே சுரேஷிற்கு லண்டன் செல்வதற்கு 5 வருட Multiple Entry visa இருந்தது.

லண்டன் விமானத்தில் check in செய்து தன் இருக்கையில் அமர்ந்து வெளியே சுரேஷ் எட்டிப் பார்த்தான். விமானம் ஓடுபாதையில் ஓடி மேகங்க ளுக்குள் புதைந்து கொண்டிருந்தது. குவியல் குவியலான அந்த வெண் மேகங்களைப்போலவே அவன் மனமும் வெண்மையாகியிருந்தது.

வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவனவன் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும் (1கொரிந்தியர் 7:2,3). ●

# சந்தோஷம்



**உணர்ச்சிகளைக் கையாளுவது எப்படி?**

## உணர்வுகள்

பகுதி 4

“இப்போதான் ஒரு பிரியாணி, சிக்கன் லாலிபப் மனசுல நினைச்சேன், என் Mind Voiceஐ புரிஞ்சு கரெக்டா வாங்கிட்டு வந்து சர்பிரைஸ் பண்ணிட்டீங்களே! ரொம்ப சந்தோஷமா இருக்கு”, “ஐ-போன் வாங்கனும்னு நினச்சேன் எப்படியோ வாங்கிவிட்டேன்...” இப்படியெல்லாம் பலர் சொல்வதைக் கேட்டிருப்போம். ஏன் அந்த சந்தோஷமான தருணத்தை நாம் கூட அனுபவித்திருப்போம். ஆனால், இந்த சந்தோஷம் நிரந்தரமானதா? சில நாட்கள், ஏன் சில மணி நேரங்கள் மட்டுமே நிலைக்கக் கூடியது என்பதும் நமக்கு தெரிந்த விஷயம் தான். மதியம் நமக்கு ரொம்ப பிடித்த பிரியாணி சாப்பிடும்போது இருந்த சந்தோஷம், இரவு காணாமற் போய்விட்டதே, அப்போ என் உணர்வலைகளில் என்ன தான் நடக்கிறது? கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயி ருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறு படியும் சொல்லுகிறேன் என்று பிலிப்பியர் 4:4-ல் வாசிக்கிறோம். ஆனால் 24 மணி நேர மும், எல்லா நாட்களும் ஏன் என்னால் சந்தோஷ மாய் இருக்க முடியவில்லை? சந்தோஷத்திற் கும், மகிழ்ச்சிக்கும் என்ன வித்தியாசம்? இப் படிப்பட்ட மனநிலை மாற்றத்திற்கும், மூளைக் கும் என்ன தொடர்பு உள்ளது? வாங்க! சந் தோஷம் என்னும் உணர்வை பற்றி பார்க்கலாம்!!

## சந்தோஷம் என்றால் என்ன?

தொடர்ச்சியாக நமக்கு பிடித்தவைகளையே நடக்கும்போது, வெற்றிகளையே அனுபவிக்கும்போது, மனது நிறைவாக இருக்கும்போது அனுபவிக்கக் கூடிய உணர்வுகள் தான் ‘சந்தோஷ உணர்வுகள்’ என்று அழைக்கப்படுகிறது.

**சரி ஒருவர் சந்தோஷமாக இருப்பதை எப்படியெல்லாம் வெளிப்படுத்துகிறார்?**

**முக பாவனைகள் –** சந்தோஷமாக இருக்கும்போது சிரித்துக் கொண்டே இருப்பார்கள்.

**மனநிலை –** நிலையான மனநிலையோடு, பயப்படாமல் இருப்பார்கள்.

**பேசும்போது –** நிதானமாக, பொறுமையாக பேசுவார்கள்.

## தெரிந்து கொள்ளுங்கள்

சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சி வித்தியாசமானது: ‘சந்தோஷம்’ என் னும் உணர்வு வெளிப்பிரகாரமாக பாராட்டப்பட்டால், ஒரு புது பொருளை வாங்கும்போது அதன் நிறைவினால் வெளிப்படும் உணர்வை சந்தோஷ உணர்வு என்று அழைக்கிறோம். மகிழ்ச்சி என்பது சந்தோஷத்திற்கும் மேலான உணர்வாகும். தேவனோடு உள்ள உறவினால் ஒருவர் அனுபவிக்கின்ற சமாதானமான மனநிலை என்றும் சொல்லலாம்.

உதாரணமாக 10 கோடி ரூபாய் லாட்டரி பரிசாக உங்களுக்கு கிடைக்கப்போகிறது என்பதை கேள்விப்படும்போது சந்தோஷப் படுகிறீர்கள். பத்து மாதம் கஷ்டப்பட்டு சுமந்து குழந்தை பெற்றெ டுக்கும் போது மகிழ்ச்சியடைகிறீர்கள்.

## அறிவியல் உண்மையையும் தெரிந்துகொள்ளுங்கள்:

ஒருவரின் சந்தோஷத்தை நம் மூளையில் உள்ள நான்கு அமிலங்கள் (Chemicals) நிர்ணயிக்கிறது. இவைகள் அதாவது மைய நரம்பு மண்டலத்தில் உற்பத்தியாகிறது. அதாவது டோப்பமைன், ஆக்ஸிடாஸின், செரோடோனின், எண்டார்ஃபின்ஸ் (Dopamine, Oxytocin, Serotonin, Endorphins) இவைகள் சந்தோஷ உணர்வை தூண்டக்கூடிய முக்கிய அமிலங்களாகும்.

## டோப்பமைன் (Dopamine)



நீங்கள் ஒரு காரியத்தை சிறப்பாக செய்து, அதற்கான பலனை அனுபவிக்கும்போது, உதாரணமாக பதவி உயர்வு கிடைக்கும்போது, பாராட்டப்படும்போது, பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறும்போது, இந்த அமிலம் வேலை செய்கிறது. உங்களுக்குள் 'மன நிறைவை' அல்லது 'சந்தோஷ உணர்வை' கொடுக்கிறது. மற்றவர்களுக்கு கரிசனையாய் உதவி செய்யும்போது கூட இந்த அமிலம் சுரக்கும், "Chemical of reward" என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள்.

## ஆக்ஸிடாஸின் (Oxytocin)



பாசமாக அன்பாக ஒருவர் உங்களைத் தொடும்போது, கட்டி அணைக்கும்போது, நெருக்கமான உறவில் இருக்கும்போது இந்த அமிலம் சுரக்கிறது. ஒருவர் செல்ல பிராணி (நாய், பூனை...) போன்றவைகளை வளர்க்கிறார் என்றால் அதனை கொஞ்சும்போது இந்த அமிலம் சுரக்கிறது.

## செரோடோனின் (Serotonin)



மனஅழுத்தத்தில் உள்ளவர்களுக்கு இது சந்தோஷம் தரும் மருந்தாக கருதப்படுகிறது. நாம் அன்றாடம் செய்யும் பல செயல்களினால் இது தூண்டப்படுகிறது. வெளியில் நடப்பது, உடற்பயிற்சி செய்வது, மலரும் சந்தோஷமான நினைவுகளில் அசைபோடுவது இவையெல்லாம் இந்த அமிலம் சுரக்க உதவுகிறது.

## எண்டார்ஃபின்ஸ் (Endorphins)



சரீரப் பிரகாரமாக ஏற்படும் வலியிலிருந்து அந்த சோகத்தை மேற்கொள்ள இது உதவுகிறது.

அதாவது சரீரத்தில் பெலவீனம் ஏற்படும்போதும் சரி, மன உளைச்சலிலும் நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பியதால் இயற்கையாகவே இந்த அமிலங்களை நம்மில் உற்பத்தியாகும்படி நம்மை சிருஷ்டித்திருக்கிறார். சரி, இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் எல்லா நேரங்களிலும் எங்களால் சந்தோஷமாக இருக்க முடியவில்லையே! அப்படியே மனஅழுத்தம், டென்ஷன் அதிகரித்தால், போதை பொருட்களோ அல்லது மதுபானமோ எடுத்துக் கொண்டால் ஒருவிதமான சந்தோஷம் கிடைக்குதே! அப்போ அது எப்படி?

மதுபானம் எடுக்கும்போது இது டோப்பமைன் நியூரான்களை செயல்பட தூண்டுகிறது. அதன் விளைவால் சந்தோஷம், மகிழ்ச்சி கிடைக்கிறது. இது சில மணி நேரம் மட்டுமே நிலைக்கக் கூடியது. வேதத்தில் அகாஸ்வேரு ராஜா (எஸ்தர் 1) மதுபானம் அருந்தியதால், இந்த சந்தோஷ நிலையை அடைந்து, என்ன செய்கிறார் என்பதை தெரியாமலே செய்து கொண்டிருந்தார். அதன் விளைவு அவ்வளவு உயர்ந்த ராஜா, தன் மனைவியை அவ்வளவு ராஜாக்கள் முன் நடனம் ஆடி மகிழ்விக்க சொன்னார். தன் மனைவி தன்னை மகிழ்விக்கலாம், ஆனால் அங்கு கூடியிருந்த மற்றவர்களை மகிழ்விக்கலாமா? அதிகமான மதுபானம் அருந்திய அகாஸ்வேருவின் மூளையால் சரியாக யோசிக்க முடியவில்லை. எனவே சந்தோஷம் என்னும் உணர்வில் நம்பிக்கை வைக்காமல் அவர் தரும் மகிழ்ச்சியில் நிலையாய் இருக்க பழகிக் கொள்ளுங்கள்.

சந்தோஷமாய் இருப்பது ஆரோக்கியத்திற்கு மிக நல்லது.
உங்கள் மூளையை சந்தோஷமாக
வைத்துக்கொள்ள சில டிப்ஸ்:

சிரிப்பு, புன்னகை உங்களை சந்தோஷமாக வைத்துக் கொள்ள உதவும்.... உடற்பயிற்சி உங்களை சந்தோஷமாக வைத்துக் கொள்ள உதவும்.... பிடித்தமானவர்களோடு மனம் விட்டுப் பேசுவது சந்தோஷமாக வைத்துக் கொள்ள உதவும்.... பிடித்த பொழுதுபோக்கு எடுத்து அதனை சிறப்பாக செய்வது உங்களை சந்தோஷமாக வைத்துக் கொள்ள உதவும். உங்களால் சந்தோஷமாய் இருக்க முடியும்... மகிழ்ந்து களிகூர முடியும்! ●

**உணர்வுகள் தொடரும்...**

# ஊக்கம்

## பவுல் - ஒநேசிமு

“முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில்லாதவன், இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன்” பிலேமொன் 1:11ல் ஒநேசிமு என்பவன் விசுவாசியாகிய பிலேமொன் என்பவனுக்கு அடிமையாகப் பணிபுரிந்திருக்கிறான் என்பதை பவுல் பிலேமொனுக்கு எழுதிய கடிதத்திலிருந்து அறிகிறோம். ஒநேசிமு எதற்காக பிலமோனை விட்டு ஓடிப்போனான் என்று தெரியவில்லை. ஓடிப்போன ஒநேசிமு பவுலின் பிரசங்கத்தினால் இயேசுவை ஏற்றுக்கொண்டு புதிய வாழ்வை வாழத் துவங்கினான். அப்போஸ்தலனாகிய பவுலை சிறையில் சந்தித்த அவன், பவுலின் அன்பினாலும், ஜெபத்தினாலும் அதிகமாக ஆண்டவரை நெருங்க ஆரம்பித்தான். ஒநேசிமுவின் மாற்றத்தைக் கண்ட பவுல் ஒநேசிமுவை தன் “மகன்” என்று கூறுகிறார். பவுல் ஒநேசிமு இடறிப்போய்விடக் கூடாது என்பதற்காக, ‘இன்னும் ஒருமுறை ஒநேசிமுவுக்கு வாய்ப்புக் கொடுத்து, கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்ளும்படி பவுல் பிலேமொனுக்கு எழுதுகிறார். தவறிப்போன ஒரு பாத்திரம், மீண்டும் எஜமானிடம் சேர்க்கப்பட, சிறையிலிருந்து கொண்டே பவுல் காரணமானார். நம் மத்தியிலும் செய்த தவறுகளால் தங்களை ஒளித்து வாழுகிற மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் மனம்திரும்ப நாம் அவர்களிடம் காட்டும் அன்பும், ஜெபமும் அவசியமாகிறது.



வாலிபர்களே! யாருக்கும் பிரயோஜனமில்லாத ஒநேசிமுவை பவுல் தன் அன்பினாலும், ஜெபத்தினாலும் அவனை ஊக்கப்படுத்தி அனைவருக்கும் பிரயோஜனமுள்ளவனாய் மாற்றினார். எனவே, நாமும் பிறரை ஊக்குவித்து, அவர்கள் வாழ்வில் முன்னேற உதவி, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்!!



## அச்ரேக்கர் - சச்சின் டெண்டுல்கர்

"Master Blaster" என்று அனைவராலும் புகழப்படுபவர் சச்சின் டெண்டுல்கர். இவர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். குறும்பு அதிகம் கொண்ட சச்சின், தனது 11 வயதில் ஒருநாள் திருட்டு மாங்காய் பறிக்கப்போய் தொப்பென்று விழுந்த தற்கு தண்டனையாக கிரிக்கெட் பயிற்சிக்கு மாதம் 10 ரூபாய்க்கு அச்ரேக்கரிடம் சேர்க்கப்பட்டார். முதலில் சொதப்பிய சச்சின், அச்ரேக்கரின் ஊக்கத்தால் விரைவில் கிரிக்கெட் வீரனானார். சச்சின் அச்ரேக்கரின் செல்ல வீரன் ஆனதும், ஃபீஸ் வாங்காமல் வடாபாவ், ஜூஸ் வாங்கித்தந்து ஊக்குவிக்கும் மற்றொரு தந்தையாக அவர் மாறியிருந்தார். முதன்முறையாக க்ளப்புக்கு ஆடிய ஆட்டத்தில் சச்சின் டக் அவுட், அடுத்த போட்டியும் அவ்வாறே விளையாடினார். மூன்றாவது போட்டியில் 24 ரன்கள் அடித்தார். ஆனால் அதிக ரன்கள் எடுத்தார் என்ற செய்தியில் அவர் பெயர் வராது. எனவே சச்சின் அனுமதியோடு Extra ரன்களை 30 ரன்களாக ஆக்கி Scoreயை மாற்றி எழுதினார் Scorer. அதற்கு கடுமையாக அச்ரேக்கர் கடிந்துகொள்ள, அன்று முதல் நேர்மையற்ற முறையில் கிரிக்கெட் விளையாடக் கூடாது என்று உறுதியை எடுத்துக் கொண்ட சச்சின், இன்று வரை நேர்மையான முறையில் விளையாடி ரன்களை சேர்த்து இன்று உலகம் முழுவதும் அனைவராலும் போற்றப்படும் ஜாம்பவானாகத் திகழ்கின்றார்.

வாலிபர்களே! அச்ரேக்கர் தனது மாணவனை ஊக்குவிக்க வேண்டிய நேரத்தில் ஊக்குவித்து, தவறும்போது கண்டிப்பில் கவனமாக இருந்து, தட்டிக் கொடுக்க வேண்டிய இடத்தில் தட்டிக் கொடுத்து ஊக்குவித்தார். நீங்கள் உங்கள் நண்பர்கள் மற்றும் உடன் பயிலும் மாணவர்கள் தவறு செய்யும்போது, கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்து, ஊக்கப்படுத்த வேண்டிய இடத்தில் ஊக்குவித்தால் பல மாமனிதர்களை உருவாக்க முடியும்!

# கொடுத்தவர்கள்

## எலியா

இஸ்ரவேல் பாகாலை வணங்கிக் கொண்டிருந்த நேரம், அப்பொழுது கீலேயாத்தின் குடிகளில் எல்லாவற்றையும் இழந்து சூழ்நிலையிலும் கர்த்தருக்காக வைராக்கியத்தோடு எழும்பி காரியங்களை நடப்பித்தார் திஸ்பியனான எலியா. அவர் வேண்டிக்கொண்டபோது கர்த்தர் வானத்தின் பனியையும், மழையையும் அடைத்தார். அவர் வேண்டிக் கொண்டபோது, வானத்திலிருந்து அக்கினி இறங்கி வந்தது. இப்படி வல்லமை யான செயல்களை செய்த எலியா, யேசபேலுக்கு பயந்து தன் சொந்த தேசத்தை விட்டு ஓட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது (1 இராஜா.19:1-3). தன் பிராணனை காப்பாற்றிக் கொள்ள எலியா இஸ்ரவேல் தேசத்தை விட்டு யூதா தேசத்திற்கு தப்பி ஓட ஆரம்பித்தார். அப்படி போகிறபோது வழி எங்கிலும் இஸ்ரவேல் ஜனங்கள் எலியாவை அவன் காதுகள் கேட்க இகழ்ந்து பேச ஆரம்பித்தனர். இந்த தூஷண வார்த்தைகளைக் கேட்டு எலியா மிகவும் சோர்ந்துபோய், “போதும் கர்த்தாவே என்னை எடுத்துக் கொள்ளும்” என்று கூறி சூரைச் செடியின் கீழ் படுத்துக் கொண்டான். ஆனால், ஆண்டவர் அவனை விட வில்லை. தேவன் எலியாவை தட்டி எழுப்பி, “நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகு தூரம்” என்று ஊக்கப்படுத்தி ஓரேப் பர்வத்திற்கு நேராய் எலியாவை வழிநடத்தினார். ஓரேப் பர்வத்தில் எலியாவின் மீது தேவ மகிமை சூழ்ந்துகொண்டது. எலியா திடப்பட்டு தேவனுக்காய் பெரிய காரியங்களைச் செய்து அக்கினி இரதத்தில் உயிரோடே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பாக்கியத்தைப் பெற்றார்.



வாலிபர்களே! பலவிதங்களில் சோர்வுகள் உங்களை சுற்றி வரும். சோர்வுபடுத்தும் வார்த்தைகளால் நீங்கள் சோர்ந்து போகாமல் தேவ திட்டத்திற்கு ஒப்புக்கொடுக்கும் போது தேவன் உங்களை உற்சாகப்படுத்தி, எலியாவைப் போல தேவனால் உங்களையும் பயன்படுத்துவார்!!

மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தவர் Johny Depp இவரின் தகப்பனார் குடிபழக்கம் உள்ளவர். இதனால் சிறுவயதிலேயே தந்தையால் சித்திரவதைக்குள்ளானார். தாயும், தந்தையும் விவாகரத்து பெறவே, இவரது வாழ்க்கை கேள்விக்குறியானது. இளமைக் காலத்திலேயே போதைப் பழக்கத்திற்கு அடிமையானார். இதனால் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டார். அன்றிலிருந்து தான் விரும்பும் வழியில் பயணிக்க முடிவெடுத்தார். ஒரு இசைக்குழுவில் கிட்டார் வாசித்தும் போதிய வருமானம் கிடைக்காததால் வீதிகளில் பேனாக்கள் விற்க ஆரம்பித்தார். வாடகைக்கு வீடெடுக்க பணமில்லாததால் தனது நண்பனின் காரில் மாதகணக்கில் வாழ்ந்தார். தனது 20வது வயதில் நண்பனின் தங்கையையே மணந்தார். இவரது மனைவி உங்களால் நடிக்க முடியும் என்று அவரை அதிகமாக ஊக்கப்படுத்தி Nicolas cageயிடம் இவரை அறிமுகம் செய்து, சில படங்களில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. வெறுமனே பணத்தில் கவனம் செலுத்தாது, தன்னை கவர்ந்த கதாபாத்திரங்களை மட்டுமே தேர்வு செய்து நடித்தார். விரைவிலேயே பல கோடி மக்களின் மனம் கவர்ந்த கதாநாயகனாக மாறினார். இவரது இன்றைய சொத்து மதிப்பு 400 மில்லியன் அமெரிக்க டாலர்களையும் தாண்டிவிட்டது. இருப்பினும், இவர் ஒய்ந்துவிடவில்லை. ஏழைகள், அனாதைகள், முதி யவர்கள், நோயாளிகள் என பலவீனமான மக்களை தேடிச் சென்று அவர்களுக்காகத் தன்னிடமுள்ள பணம், நேரம் அனைத்தையும் செலவிடுகின்றார்.



## ஜானி டெப்

வாலிபர்களே! நீங்களும் Johny Deppஐ போல, யாராவது உங்களை ஊக்கப்படுத்தும் போது அவர்கள் சொல்லும் காரியங்களுக்கு செவிகொடுத்து முயற்சியுங்கள். ஊக்கப்படுத்துபவர் சொல்லும் ஒரு வார்த்தையால் நீங்கள் உச்சத்தை அடைய முடியும் என்பதை மறந்துவிடாதீர்கள்!

மோகன் சி. லாசரஸ்

**பழைய ஏற்பாட்டுக் காலத்தில், 'எல்க்கானா' என்கிற ஒரு மனிதர் வாழ்ந்து வந்தார். அவருக்கு "அன்னாள்', 'பெனின்னாள்' என்று இரண்டு மனைவிகள் இருந்தார்கள். பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள். ஆனால் அன்னா ளுக்குக் குழந்தை பாக்கியமில்லை. அதுதான் அன்னாளுக்குப் பிரச்சனை. ஆனால் எல்க்கானா, அன்னாளுக்கு எல்லாவற்றிலும் இரட்டிப்பான பங்கு கொடுத்து, அவளை அதிகமாக நேசித்தார்.**



# கேளுங்கள்!

அன்னாளுக்கு குழந்தை பாக்கியம் இல்லாததினால், அவள் துக்கப்பட்டு அவளுடைய இருதயம் காயப்படும் படியான வார்த்தைகளை அவளுடைய சக்களத்தி யான பெனின்னாள் பேசுவாள். அதனிமித்தம் அன்னாள் சாப்பிடாமல், அழுதுகொண்டே இருப்பாள். தனக்குக் 'குழந்தை இல்லையே' என்கிற வேதனையைக் காட்டிலும், மற்றவர்கள் பேசுகிற வார்த்தைகள் தான் அன்னாளுடைய உள்ளத்தை அதிகமாகக் காயப்படுத்தியது. எல்க்கானா கர்த்தரைப் பணிந்து கொள்ளவும், அவருக்குப் பலியிடவும், வருடத்திற்கு ஒருமுறை, குடும்பமாக "சீலோ" என்கிற இடத்திற்குப் போய் வருவது வழக்கம். சீலோவிலே கர்த்தரைத் தொழுது கொள்ள குடும்பமாகப் போன சமயத்தில், எல்லோரும் புசித்துக் குடித்து சந்தோஷமாக இருந் தார்கள். ஆனால் அன்னாள் மட்டும் அழுது கொண்டு துக்கத்தோடு இருந்தாள்.

"என் கணவரால் எனக்கு உதவி செய்ய முடியவில்லை. அவரால் எனக்கு ஆறுதல் சொல்லத்தான் முடிகிறது. நான் இப்படியே ஒவ்வொரு நாளும் அழுது கொண்டே இருப்பதி னால், எனக்கு என்ன பிரயோஜனம்? என் அழுகையின் சத்தத்தைக் கேட்கிற, என் கண்ணீரைக் காண்கிற ஒருவர் இருக்கிறார்! அவரைப் போய் நான் சந்திக்க வேண் டும்" என்கிற ஒரு எண்ணம் அவள் உள்ளத்திற்குள் வந்தது.

**"சீலோவிலே அவர்கள் புசித்துக் குடித்தபின்பு, அன்னாள் எழுந்திருந்தாள்; ஆசாரியனாகிய ஏலி கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நிலையண்டையிலே ஒரு ஆசனத்தின் மேல் உட்கார்ந்திருந்தான்"** (1சாமுவேல் 1:9).



அந்த தேவாலயத்தில், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட நியாயாதிபதியாகிய, 'ஏலி' என்கிற ஒரு ஆசாரியன் இருந்தார். அந்த நாட்களில், ஆசாரியர்கள்தான் ஜனங்களுக்காக தேவ சமூகத்திற்குப் போய் ஜெபம் பண்ணி, தேவனிடத்தில் பலி செலுத்துவார்கள். அன்றைக்கு வயதான ஆசாரியனாக

இருந்த ஏலி அந்த ஆலயத்தின் வாசலருகே உட்கார்ந்திருந்தார். அன்னாள் அந்த தேவாலயத்திற்கு வந்தபோது, "தேவ மனிதன் உட்கார்ந்திருக்கிறாரே" என்று எண்ணி, அவரிடத்தில் போய் முழங்கால்படியிடாமல், கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்தாள்.

## கண்ணீரோடு கேட்டாள்!

அவள் ஆசாரியனாகிய ஏலியினிடத்தில் போய், 'எனக்காக ஜெபியுங்கள்' என்று சொல்லவில்லை. கர்த்தரிடத்தில் போய் முறையிட, அவள் தேவாலயத்திற்குள் போனாள். காரணம், "கர்த்தரால் மட்டுமே என் கண்ணீரைத் துடைத்து, எனக்கொரு அற்புதத்தைச் செய்ய முடியும், அவர்தான் என் பிரச்சனைக்கு ஒரு முடிவைக் கொடுக்க முடியும்" என்று அன்னாள் அறிந்திருந்தாள்.

"அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி(னாள்)" (1 சாமுவேல் 1:10).

எனக்கு அன்பானவர்களே! உங்கள் பார்வை மனிதர்கள் மீது அல்ல, ஊழியக்காரர்கள் மீது அல்ல, தேவாதி தேவனாகிய கர்த்தர் பக்கமாகத் திரும்ப வேண்டும். கர்த்தரை நோக்கி வேண்டிக் கொண்ட அன்னாள், "நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படியே, எனக்கு ஒரு மகனைக் கொடுத்தார்" என்று சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்தினாள். நீங்கள் கர்த்தரிடத்திலிருந்து அற்புதத்தைப் பெற வேண்டுமானால், அன்னாளைப்போல, "கர்த்தர் என் ஜெபத்திற்குப் பதில் கொடுத்தார், நான் வேண்டிக் கொண்டதைப் பெற்றுக் கொண்டேன்" என்று நீங்களும் சொல்ல வேண்டுமானால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்? மனிதர்களிடத்தில் போய் நீங்கள் அழாதீர்கள், கர்த்தரிடத்தில் போய், மனம்கசந்து, அழுது ஜெபியுங்கள்.

அவருடைய சமூகத்தில் உங்களுடைய கண்ணீரைச் சிந்துங்கள். அவரிடத்தில் உங்கள் பாரங்களைச் சொல்லுங்கள். அப்பொழுது, அன்னாளை நினைத்தருளிய கர்த்தர், உங்களையும் நினைத்தருள்வார்!

## பொருத்தனையோடு கேட்டாள்!

"...தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்" (1சாமுவேல் 1:11).

அன்னாள் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணும் போது, "ஒரு ஆண் பிள்ளையை எனக்குத் தாரும், அந்தப் பிள்ளையை நான் உமக்கே தந்துவிடுகிறேன்" என்று

ஒரு ஆண் பிள்ளையை எனக்குத் தாரும், அந்தப் பிள்ளையை நான் உமக்கே தந்துவிடுகிறேன்



அவரிடத்தில் ஒரு பொருத்தனை பண்ணினாள். எவ்வளவு அருமையான ஒரு பொருத்தனை பாருங்கள்! நீங்களும் அதேபோல ஒரு அர்த்தமுள்ள ஒரு விலைக்கிரயம் பண்ணுகிற பொருத்தனை பண்ண வேண்டும்.

யாக்கோபு கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணும்போது, "தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என்னைப் பாதுகாத்து, என்னை திரும்பக் கொண்டு வந்தால், நீ எனக்குத் தருகிற எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் கொடுப்பேன்..." என்று பொருத்தனை பண்ணினார்.

இதன் அர்த்தம் என்னவென்றால் வருகிற வருமானத்திலெல்லாம், பத்தில் ஒரு பங்கை கர்த்தருக்குக் கொடுப்பது, அவர்கள் எல்லோரும் செலவு பண்ணுகிற பொருத்தனை பண்ணினார்கள். நாம் எந்த மாதிரியான பொருத்தனை பண்ணுகிறோம்? கர்த்தர் அதையும் கவனிப்பார். தியாகம் பண்ணி பொருத்தனை செய்ய வேண்டும்.

## பெற்றுக்கொள்ளும் வரைக்கும் கேட்டாள்!

அன்னாள், அந்த தேவாலயத்தில் வெகு நேரமாக ஜெபித்துக் கொண்டேயிருந்தாள். அவள் அப்படி ஜெபித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த ஆசாரியனாகிய ஏலி கூட, "எத்தனையோ பேர் ஆலயத்திற்கு வருகிறார்கள், முழங்கால்

படியிடுகிறார்கள், சில நிமிட நேரங்கள் ஜெபித்துவிட்டுப் போய் கொண்டே இருக்கிறார்கள். நான்கூட இவ்வளவு நேரம் ஜெபம் செய்ததில்லை. இவள் மட்டும் ஏன் ரொம்ப நேரமாக ஜெபம் செய்து கொண்டிருக்கிறாள்?" என்று ஒருவேளை நினைத்தி ருக்கலாம்.



கர்த்தரிடத்திலிருந்து பதிலைப் பெற்றுக் கொண்ட பிறகு, அவள் துக்கமுகமாக இருக்கவேயில்லை.

அவர் அன்னாளை உற்றுப் பார்த்தபோது, "இவள் என்னதான் அப்படி ஜெபம் பண்ணுகிறாள்? உதடு மட்டும் அசைகிறது. அனால் சத்தம் வெளியே வரவில்லையே இந்த மாதிரி மணிகணக்காக யார் ஜெபம் பண்ணுவார்கள்? ஒருவேளை இவள் குடித்து, வெறித்து, போதையில் வந்தி ருக்கிறாள் போலும்..." என்று ஏலி நினைத்து, "நீ எது வரைக்கும் வெறித்திருப்பாய்? உன் குடியை உன்னைவிட்டு விலக்கு" என்று சொன்னார்.

அப்பொழுது அவள், "இல்லை, உமது அடியாளாகிய நான், மனக்கிலேசமுள்ளவள்! துக்கம் நிறைந்தவள்! காயப்பட்டவள்! வேதனைப்பட்டவள்! என் இருதயத்தின் வேதனையைக் கர்த்தருடைய சமூகத்தில் ஊற்றிவிட்டேன்..." என்று சொன்னாள். அன்னாள், தன்னுடைய இருதயத் திற்குள் ஒன்றையும் வைக்காமல், எல்லா பாரங்களையும் கர்த்தரிடத்தில் சொல்லிவிட்டு, "ஆண்டவரே, இதுதான் என்னுடைய நிந்தை! இதுதான் என் வேதனை! இதுதான் என் இருதயத்தின் காயம்! இதுதான் என் துக்கம்! இதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனக்கு ஒரு அற்புதத்தைச் செய்யும்..." என்று அவள் கர்த்தரிடத்திலிருந்து பதிலைப் பெற்றுக் கொள்ளும்வரைக்கும் ஜெபம் செய்து கொண்டிருந்தாள்.

கர்த்தர் அன்னாளை நினைத்தருளினார். ஏன் தெரியுமா? அவள் ஜெபம் பண்ணி முடித்து கர்த்தரிடத்திலிருந்து பதி லைப் பெற்றுக் கொண்ட பிறகு, அவள் துக்கமுகமாக இருக்கவேயில்லை. அதுதான் விசுவாசம்! விசுவாசம் என்பது கிரியைகளிலே வெளிப்படுத்துவது. கர்த்தருக்குள் சந்தோஷமாக இருப்பதுகூட, அவர் மீது நாம் கொண்டிருக்கிற விசுவாசத்தை வெளிப்படுத்துகிற ஒரு காரியம்தான்.

அன்னாள் தான் கர்த்தரிடத்தில் பொருத்தனை பண்ணிக் கொண்டபடியே, அந்தப்பிள்ளை பால் மறந்தவுடன், ஏலியினிடத்தில் கூட்டிக் கொண்டுபோய், தேவாலயத்தில் நிறுத்தி, பொருத்தனையை நிறைவேற்றி விட்டாள்.

இன்றைக்கு அனேகர் கர்த்தரிடத்தில் என்னென்ன பொருத் தனை செய்வார்களோ, அவைகளை நிறைவேற்றாமல், நாளடைவில் அவைகளையெல்லாம் அப்படியே மறந்து விடுகிறார்கள். அப்படி மறப்பது மிகவும் ஆபத்தான ஒரு காரியம். தேவ சமூகத்தில் பொருத்தனை பண்ணினால் அதை மறக்காமல் நிறைவேற்ற வேண்டும்.

பாருங்கள், அன்னாள் தான் கர்த்தரிடத்தில் பண்ணிய பொருத்தனையில் உண்மையாக இருந்து, ஆசீர்வாதங் களைப் பெற்றுக் கொண்டாள். அவள், "கர்த்தருடைய ஊழியக்காரனாகிய ஏலி என்னிடத்தில் சொன்னபடியே, அவர் எனக்காக ஜெபித்தபடியே கர்த்தர் எனக்குத் தந்தருளினார்"

அந்தப்பிள்ளை பால் மறந்தவுடன், ஏலியினிடத்தில் கொண்டுபோய், நிறுத்தி, பொருத்தனையை நிறைவேற்றினாள்.



என்று சொல்லாமல் "நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படியே, அவர் எனக்குத் தந்தருளினார்" என்று சொல்லாமல், "நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படியே அவர் எனக்குத் தந்தருளினார்" என்று சொன்னாள். அப்படியானால், யார் உங்களுக்காக ஜெபம் பண்ண வேண்டும்? நீங்கள்தான்! உங்களுக்காக நீங்கள்தான் கர்த்தருடைய சமூகத்தில் போய், கேட்க வேண்டும்.

அன்னாளைப்போல நீங்களும் கர்த்தருக்கு உண்மையாக இருக்க உங்களை ஒப்புக் கொடுத்தால், கர்த்தர் உங்களுக்கு அற்புதம் செய்து உங்களை ஆசீர்வதிப்பார்! ●

ரெபேக்கா





# ஆரோன்

ஆரோன் என்பதற்கு "அறிவில் சிறந்தவர்", ஒளியூட்டப்பட்டவர் என்பது பொருள். சொந்தமாக செயல்படாமல் ஒரு தலைவனின் பின் தொடர்வதும் தலைவனுக்கு துணைவராக செயல் படுவதும் இவரது சிறப்பு இயல்புகள். மற்றவர்களின் கட்டாயத்திற்கு வளைந்து கொடுப்பதில் பிலாத்துவைப் போன்றவர் இஸ்ரவேலின் முதல் பிரதான ஆசாரியனாகிய ஆரோன்.

## அறிமுகம்

பெற்றோர் : அம்ராம், யோகெபேத்

மனைவி : எலிசபாள்

மகன்கள் : நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார்

வாழ்ந்த இடங்கள் : எகிப்து, சீனாய் வனாந்திரம், மோவாப்.

## நற்பண்புகள்

- ☞ தேவன் அளித்த பொறுப்புகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவர்.
- ☞ துணைத் தலைவராக இருப்பது மிகவும் சிரமமான பணி. எனினும் அதை திறம்படச் செய்தார்.
- ☞ தனது மக்கள் இருவர் தேவனுடைய செயலினால் மரணமடைய நேர்ந்ததை பொறுமையுடன் சகித்தார்.
- ☞ தனது சகோதரிக்காக உருக்கமாக பரிந்து பேசினார்.

## பெலவீனங்கள்

- ☞ மக்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி கன்றுக்குட்டியை உண்டாக்கி, அதை தெய்வம் என்று அழைத்து பண்டிகையை ஏற்படுத்தினார்.
- ☞ மக்களின் இழிவான ஆசைக்கு ஏற்ப அவர்களை நிர்வாணமாக இருக்கச் செய்தார்.
- ☞ தொடக்கத்தில் இவரது மனம்திரும்புதல் கள்ளத்தனமாக இருந்தது (எரே.3:10).
- ☞ மோசேயுடன் சேர்ந்து கன்மலையை அடித்தலில் ஈடுபட்டார்.
- ☞ மிரியாமுடன் சேர்ந்து மோசேவுக்கு எதிராக பேசினார்.

"ஆரோனைப்போல அழைக்கப்படாவிட்டால், இந்த கனமான ஊழியத்தை செய்ய முடியாது" என்று வேதாகமத்தில் வசனம் கூறுகிறது. இதன்படி ஆரோனைபோல உண்மையாய், சிரமத்தைப் பாராமல், பொறுமையுடன் மனப்பூர்வமாய் தேவ ஊழியம் செய்தால், தேவனே இறங்கி வந்து நம்மை ஆசீர்வதிப்பார்! ●

# ஊக்கப்படுத்துபவர்

"நீங்களேப் பாருங்க! இந்த கஷ்டமான நிலை மாறிடும்", "இது சரியாயிடும்", "நீ கண்டிப்பா இந்த புராஜெக்டில ஜெயிக்கப்போற பாரு" இப்படிப்பட்ட வார்த்தைகள் கேட்கவே எவ்வளவு சந்தோஷமாக இனிமையாக இருக்கிறது பாருங்கள்! அப்போ உடைந்த நிலையில் இருக்கும் அந்த நண்பருக்கு சோர்ந்துபோன உங்கள் தோழிக்கு, கலங்கி நிற்கும் அந்த குடும்பத்திற்கு நீங்கள் ஏன் ஊக்கப்படுத்துபவராக இருக்கக் கூடாது?

நம்மைக் குற்றப்படுத்தி பேசுவதையே கேட்டுப் பழகிப்போன நமக்கு, 'நீ சரி யில்லை", இந்த புராஜெக்டில தோற்றதற்கு நீ தான் காரணம்", "குடும்ப மானமே உன் னால போச்சு" இப்படியே கேட்டு பழகிப் போன நமக்கு, காதுகுளிர உற்சாகமான வார்த்தைகளைக் கேட்பது எவ்வளவு நன்றாக இருக்கும். சரி! வேதம் இதைப் பற்றி என்ன சொல்கிறது? நம் எல்லோ ருக்கும் சிறந்த முன்மாதிரி இயேசுதான். இயேசு ஊக்கப்படுத்தினாரா? இல்லை மற்றவர்களின் குறைகளை கண்டுப் பிடித்து அவர்களை மட்டம் தட்டினாரா? வேதத்தில் சில உதாரணங்கள் மூலம் இதனைப் பற்றி இன்னும் ஆழமாகப் பார்க்கலாம்...



- **சமாரியா ஸ்திரீ:** 5 புருஷர்களோடு வாழ்ந்து, வாழ்க்கையே மோசமான நிலையில் இயேசுவை சந்தித்தாள் (யோவான் 4:4-42). இயேசு அவளுடைய நிலைய அவளுக்கு உணர்த்தினாரே தவிர அவளை இழிவு படுத்தி காயப்படுத்தவில்லை. அதன் விளைவு அவளுக்குள் மாற்றத்தை ஏற்படுத்தி அவளை சமாரியாவில் ஊழியக்காரியாக மாற்றியது.
- **விபசாரத்தில் பிடிப்பட்ட ஸ்திரீ:** அனைவரும் கல்லால் அடித்து காயப்படுத்தி, அவமானப்படுத்த நினைக்கும்போது இயேசுவோ, ...நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார் (யோவான் 8:11).
- **கடலில் நடக்க முயன்ற பேதுரு:** பயந்ததைப் பார்த்த இயேசு, அவருடைய விசுவாசத்தை தட்டிக்கொடுத்து, அவரை உற்சாகப்படுத்தி கடலின் மேல் நடக்க வேண்டுமென்ற ஆசையையும் நிறைவேற்றினார் (மத்.14:25,26)
- **பவுல்:** தன் வாழ்வில் சோர்ந்து போன நேரங்களில், சிறையில் தன்னுடைய தூதர்களின் மூலம் தேவன் அவனை உற்சாகப்படுத்தி னார்.





சாதாரணமானவர்களையும், விபசார பாவத்தில் ஈடுபட்டிருந்தவர்களையும், பின்வாங்கிப் போனவர்களையும் தங்கள் வாழ்க்கைக்கான நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக மாற்றியது.





- **கல்லால் அடிவாங்கிய ஸ்தேவான்:** இரத்த சாட்சியாக மரிக்கும் தருவாயில் ஸ்தேவானை பரலோகத்தில் இருந்த இயேசு தன்னுடைய வரவேற்பினால் உற்சாகப்படுத்தினார்.
- **பின்வாங்கிப் போன பேதுரு :** பேதுருவையும் மற்ற சீஷர்களையும் தேடி வந்து, அவர்கள் வாழ்க்கைக்கான நோக்கத்தையும் திட்டத்தையும் அவர்களுக்குப் புரிய வைத்து அவர்களை உற்சாகப்படுத்தி அப்போஸ்தலர்களாகவும் மாற்றினார்.

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இயேசுவின் உற்சாகப்படுத்தக்கூடிய வார்த்தைகள் சாதாரணமானவர்களையும், விபசார பாவத்தில் ஈடுபட்டிருந்தவர்களையும், மீனவர்களையும், பின்வாங்கிப் போனவர்களையும் அசாதாரணமான ஊழியர்களாய், தங்கள் வாழ்க்கைக்கான நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக மாற்றியது. இயேசுவே அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருப்பாரானால், நாமும் அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும் என்று தானே விரும்புவார்?

## சரி.. எப்படியெல்லாம் ஒருவரை ஊக்கப்படுத்த முடியும்?

- எதிர்காலத்திற்கான நம்பிக்கையைத் தருவதின் மூலம்...
- அவர்களுக்குள் உள்ள விசுவாசத்தை தட்டி எழுப்புவதின் மூலம்...
- அவர்களிடம் அன்பாக இருப்பதின் மூலம்...
- அவர்களுக்காக ஜெபிப்பதின் மூலம்...
- அவர்களுக்காக நீங்கள் செயல்படுவதின் மூலம்...

அந்த நபர் ஒருவேளை உங்களோடு பணிபுரிபவராக இருக்கலாம். படிப்பவராக, ஏன் வாழ்க்கைத் துணையாக, அல்லது குடும்ப அங்கத்தினராகக் கூட இருக்கலாம். யாரை ஊக்கப்படுத்த விரும்புகிறீர்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களுக்கு energy boosterராக இருங்கள்.

நமக்குத் தெரியாமல் நாம் செய்யும் சின்ன சின்ன விஷயங்கள் மற்றவர்களுடைய வாழ்க்கையில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். உங்கள் அலுவலகத்தில் கல்லூரியில் பணிபுரியும் இடத்தில் மற்றவர்களை விட வித்தியாசமானவராக ஜொலிக்க விரும்புகிறீர்களா? ஊக்கப்படுத்துபவராக இருந்து பாருங்கள், ஜனங்கள் உங்களைத் தேடி வருவார்கள்!

## மற்றவர்களை எப்படி ஊக்கப்படுத்துவது?

### **கவனிப்பதின் மூலம்** (கலா. 6:2)

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். ஒருவருக்கு நீங்கள் கொடுக்கும் சிறந்த பரிசு என்னவென்றால், அவர்கள் சொல்வதை கூர்ந்து கவனிப்பது. அதுவே அவர்கள் பிரச்சனைகளின் பாரத்தை இலகுவாக்கிவிடும். ஒருவரைப் பற்றி ஒருவர் புரளி பேசும் இடத்தைவிட்டு, சோகமான ஒருவரோடு நேரம் செலவளித்து அவர்கள் சொல்வதை கவனிச்சு பாருங்க. அவங்க வாழ்க்கையில் அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

### **பேசுவதின் மூலம்** (எபே.4:29)

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் மற்றவர்களை நம் தேவைக்கேற்ப உபயோகப்படுத்திவிட்டு, பிறகு அவர்களை கண்டுகொள்ளாமல் இருப்பதை ஒருபோதும் விரும்புவதில்லை. ஆனால் ஜனங்களை உருவாக்கக்கூடிய, இணைக்கக்கூடிய கட்டியெழுப்பக் கூடியவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

### **ஜெபிப்பதன் மூலம்** (2 கொரி.1:11)

உங்கள் நண்பர்களுக்காகவும் தேவையில் உள்ளவர்களுக்காகவும் ஜெபிக்கும் போது, அவர்கள் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறீர்கள். சில நேரங்களில் தாவீதைப்போல் கர்த்தருக்குள் உங்கள் ஆத்துமாவை உற்சாகப்படுத்திக் கொள்ளக் கூடிய சூழ்நிலைகளும் வரும் (சங்.43:5), அல்லது தேவன் அவருடைய வார்த்தையின் மூலம் களைத்துப்போன உங்கள் ஆத்துமாவை, யோசுவாவை தேற்றினதைப்போல உற்சாகப்படுத்துவார் (யோசுவா 1).

சோர்ந்து போகாதீங்க... இறைக்கிற கிணறுதான் சுரக்கும்! மற்றவர்களை ஊக்கப்படுத்துங்கள்.. வாழ்க்கை என்பது போட்டியல்ல; வாழ்வதற்கான அழகான தருணம்; அதில் தாக்கத்தை ஏற்படுத்தலாமே! மற்றவர்களை உற்சாகப் படுத்தலாமே..! ●

புதிர் ரேச்சல்

எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள் 15.05.2019

வேதாகம

# புதையல் வேட்டை

**கீழே வேதத்தில் உள்ள சபைகளைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையைக் கண்டறிந்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்!**

**1** ஆதியில் கொண்ட அன்பை விட்டுவிட்ட சபை எது?

**2** விக்கிரக வழிபாடும், வேசித்தனமும் மிகுந்த சபை எது?

**3** உயிரோடிருந்தும் செத்துப்போன சபை எது?

**4** குளிரும், அனலு மற்ற சபை எது?

**5** எல்லா வரங்களால் நிறைந்திருந்த சபை எது?

**6** பர்னபா, லூகி, சிமியோன், சவுல், மனாயின் ஆகியோர் தீர்க்கதரிசி களாயும், போதகர்களாயும் இருந்த சபை எது?

**7** பெபேயாள் ஊழியக்காரியாக இருந்த சபை எது?

**8** தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்த சபை எது?

**9** எனக்கு சந்தோஷமும் கிரிடமுமானவர்களே! என்று பவுல் எந்தப் பட்டணத்து சபைக்கு எழுதுகிறார்?

**10** நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? என்று எந்தப் பட்டணத்து சபைக்கு எழுதுகிறார்?

## கடந்த மாத விடைகள்

1. மல்கூஸ் (யோவான் 18:10)
2. அலெக்சந்தர், ரூப்பு (மாற்கு 15:21)
3. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு (யோவான் 19:38)
4. அன்னா (யோவான் 18:13)
5. எம்மாவு கிராமம் (லூக்கா 24:13)
6. பிரகாசமுள்ள உடை தரித்த இரண்டு தூதர்கள் (லூக்கா 24:4)
7. நிக்கொதேமு (யோவான் 19 39)
8. ஒலிவ மலை (மாற்கு 14:26)
9. பிலாத்து, ஏரோது (லூக்கா 28:12)
10. நாற்பது நாள் (அப்போஸ்தலர் 1:3)

கடந்த மாத வெற்றியாளர்
சகோதரி **சோபியா, தூத்துக்குடி**
அவர்களை வாழ்த்துகிறோம்.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**JESUS REDEEMS YOUTH MINISTRIES**
**Nalumavadi, Thoothukudi Dist - 629 211**
**Cell: 9750955547 | Tel: 04639- 220022**
**youth@jesusredeems.org**





# கானா ஊர்

கானா என்னும் ஊர் புதிய ஏற்பாட்டில் சிறப்பாகக் குறிக்கப்படுகின்ற ஓர் இடம் ஆகும். யோவான் நற்செய்தி யாளர் கானாவில் நிகழ்ந்த திருமணத்தில் இயேசு கலந்து கொண்டதைப் பதிவு செய்துள்ளார்.

## கானா எங்கே உள்ளது?

இயேசு தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றிய நிகழ்ச்சி நடந்த கானா எங்கே உள்ளது என்னும் கேள்விக்கு அறிஞர்கள் தரும் பதில்கள் பல. இது கலிலேயாவில் உள்ள கானாவில் நிகழ்ந்தது என்று மட்டுமே யோவான் கூறுகிறார் (யோவான் 2:1,11). எனவே கலிலேயாப் பகுதி யில் கானாவைத் தேடுவது பொருத்தமே. கெஃபர் கன்னா என்னும் இடம் புதிய ஏற்பாட்டில் வரும் கானாவாக இருக்கலாம் என்பது ஒரு கருத்து. இந்த ஊர் இஸ்ரவேல் நாட்டில் நாசரேத்து என்னும் நகருக்கு வடகிழக்காக 7 கி.மீ. தொலைவில் உள்ளது. இருப்பினும், பெரும்பாலான அறிஞர் கருத்துப்படி, இன்று கிர்பத் கானா என்று வழங்கப்படும் ஊர்தான் நற்செய்தியில் வருகின்ற கானா ஆகும். இவ்வூர் கெஃபர் கன்னா என்னுமிடத்திலிருந்து இன்னும் 9 கி.மீ வடக்காக உள்ளது. மேற்கூறிய இரு ஊர்களைத் தவிர நாசரேத்துக்கு அருகில் உள்ள அயின் கானா என்னும் ஊரும், லெபனான் நாட்டின் தென் பகுதியிலும் கானா என்னும் ஊரும் நற்செய்தியில் வரும் கானாவாக இருக்கலாம் என்னும் கருத்துகளும் உள்ளன. விசேஷமாக இயேசுவுடன் கூட இருந்த சீஷர்களுள் நாத்தான்வேல் கானா ஊரைச் சேர்ந்தவன் (யோவான் 21:2)

## கானா திருமண ஓவியம்

கானா திருமணத்தைப் பல கலைஞர்கள் ஓவியமாக வடித்துள்ளனர். இத்தகைய ஓவியங்களுள் பவுலோ வெரோனேஸே (1528-1588) என்பவர் வரைந்தது மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

## கானா ஊரில் நிகழ்ந்த சுவாரஸ்யங்கள்

கானா ஊரில் நிகழ்ந்த திருமணத்தில் இயேசு தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றினார். இதுவே இயேசு செய்த முதல் அற்புதம் (யோவான் 2:1,11)

கானா ஊரில் மரண அவஸ்தையாயிருந்த ராஜாவின் மனுஷனின் மகனை இயேசு வார்த்தையின் மூலம் பிழைக்கப் பண்ணினார் (யோவான் 4:46-54). ●





# ஆட்டுக்குட்டியின் இரத்தம்





**நண்பர்களே, சுவிசேஷத்தின் நற்செய்தி என்னவென்றால், இயேசு சிலுவையில் மரித்ததின் மூலமாக, இரண்டு முக்கியமான வழிகளில், சாத்தானை நமது சார்பாக வென்றார். முதலாவதாக, அவர் நமது கடந்தகால பாவத்திற்கு மன்னிப்பு பெறுவதை சாத்தியமாக்கினார். இரண்டாவதாக, சட்டத்தைக் கடைபிடிக்காமல் விசுவாசத்தின் மூலமாக கர்த்தருடைய நீதியை நாம் பெற்றுக் கொள்வதை சாத்தியமாக்கினார். இதன் வழியாக இயேசு நமக்கு எதிரான சாத்தானின் பிரதான ஆயுதத்தை பலம் இழக்கச் செய்தார், அதுவே குற்றவுணர்வு. இயேசு நம்முடைய கைகளில் ஆவிக்குரிய ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறார். அதைக் கொண்டு நாம் சாத்தானின் மீது அவரின் வெற்றியை செலுத்த முடியும். நம்முடைய ஆவிக்குரிய ஆயுதங்கள் என்ன? அதை விவரிக்கும் ஒரு வசனம் தான் வெளி. 12:10,11. அதை உடனே தொடர்ந்து வரும் வரிகளில் சாத்தானை சிறகுகளுள்ள மிருகமாகவும், வலுசர்ப்பமாகவும் விவரிக்கிறது.**

அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும் அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது. இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான். மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

இங்கே முக்கியமான வாக்கியம் இதுவே, “அவனை ஜெயித்தார்கள்” விசுவாசிகளுக்கும் சாத்தானுக்கும் நேருக்கு நேர் நடக்கும் மோதலை கவனிக்கவும். யுத்தத்தில் அவர்களுடைய ஆயுதங்கள் என்னவென்றால் ஆட்டுக்குட்டியின் இரத்தமும் அவர்களுடைய சாட்சியின் வசனமுமே. கூடுதலாக, மரணத்திற்குக் கூட பயப்படாமல் அவர்கள் தங்களை யுத்தத்திற்கு முற்றிலும் அர்ப்பணித்திருந்தார்கள்.

இந்த உரையை எளிய நடைமுறை வழியில் இவ்வாறு விளக்கலாம். இயேசுவின் இரத்தம் நமக்கு என்ன செய்யும் என்று கர்த்தருடைய வார்த்தை நமக்கு சொல்வதை நாம் தனிப்பட்ட சாட்சியாக கொண்டால் சாத்தானை மேற் கொள்ளலாம்.

மூன்று ஆயுதங்களான இயேசுவின் இரத்தம், கர்த்தருடைய வார்த்தை, நம்முடைய தனிப்பட்ட சாட்சி, ஆகிய-வற்றை ஒன்று சேர்த்து உபயோகித்தால் அதின் வல்லமை புரியும். ஆனால் இவற்றை நாம் முறையாக பயன்படுத்த வேண்டுமென்றால், கர்த்தருடைய வார்த்தை இயேசுவின் இரத்தத்தைக் குறித்து என்ன சொல்லுகிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

# பஸ்கா ஆட்டுக்குட்டி



1 பேதுரு 1:18,19ல் இவ்வாறு நாம் வாசிக்கின்றோம்: உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.

இங்கு இயேசு பஸ்கா ஆட்டுக்குட்டியோடு ஒப்பிடப்படுகிறார். பழைய உடன்படிக்கையின் கீழ், பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் எல்லா இஸ்ரவலேர்களின் வீடுகளில் பூசப்பட்டிருந்தது. ஒவ்வொரு குடும்பத்தின் தகப்பனும், ஒரு பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து, அதன் இரத்தத்தை கிண்ணியில் சேகரித்து, ஒரு எளிய கருவியான ஈசோப்பு கொழுந்துகளின் கொத்தைக்கொண்டு, அந்த கிண்ணியில் இருக்கும் இரத்தத்தை இடம் மாற்றுவார். ஈசோப்பை அந்த இரத்தத்தில் முக்கி அவர் வீட்டில் தெளிப்பார். அதனால் ஈசோப்பு மிக முக்கியமானதாக இருந்தது. ஏனென்றால் கிண்ணியில் இருந்த இரத்தம் பாதுகாப்பு தரவில்லை. ஆனால் ஈசோப்பை பயன்படுத்தி வீட்டில் தெளிக்கப்பட்ட இரத்தம் குடும்பத்தை பாதுகாத்தது.

**நமது ஈசோப்பு நமது சாட்சியம்:** வேதாகமம் இயேசுவின் இரத்தம் என்ன செய்யும் என்று சொல்லுகிறதை நாம் சாட்சியாகக் கொண்டால், அது கிண்ணியில் இருந்து இரத்தத்தை எடுத்து, நமக்கு தேவையான நாம் வசிக்கும் இடத்தில் தெளிப்பதை போலாகும்.

## மீட்பும் மன்னிப்பும்

எபேசியர் 1:7ல் பவுல் கூறுகிறார்; “அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது”. இயேசுவின் இரத்தம் நமக்கு தரும் இரண்டு காரியங்களை பவுல் இங்கே குறிப்பிடுகிறார். மீட்பு, பாவங்களுக்கு மன்னிப்பு. இந்த விதிகளை நம்முடைய வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக மாற்ற வேண்டுமென்றால், நம் சாட்சியின் வாழ்வு அவசியம். சங்கீதம் 107:2ன் செய்தி இதுவே: “கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு” நாம் தைரியமாக அறிக்கையிட வேண்டும். “நான் எதிரியின் கரங்களில் இருந்து மீட்கப்பட்டேன்” சாத்தானே அந்த எதிரி.

மீட்பு என்பதற்கு “மீண்டும் வாங்குதல்” என்று அர்த்தம். நாம் ஒரு காலத்தில் பாவிகள், சாத்தானின் அடிமை சந்தையில் விற்பனைக்காக காட்சியாக்கப்பட்டிருந்தோம். ஆனால் இயேசு சாத்தானின் அடிமை சந்தைக்கு நடந்து வந்து, தம்முடைய விலையேறப்பட்ட இரத்தத்தினால், நம்மை சாத்தானின் பிடியிலிருந்து வாங்கிக் கொண்டார். அந்த எதிரியிடமிருந்து மீட்பு என்பது நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டதைப் பொறுத்ததே. கிறிஸ்துவின் மீட்பையும், மன்னிப்பையும் நம்முடைய வாழ்வில் பயனுள்ளதாக்குவதற்கு, நாம் நமது தனிப்பட்ட சாட்சியை “இயேசுவின் இரத்தத்தால் என்னுடைய எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டன” என்று அறிக்கையிடும்போது, அவை ஈசோப்பை போன்றது. அதுநம்முடையஅனுதினவாழ்க்கையில்இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை உணரச் செய்கிறது.



**“இயேசுவின் இரத்தத்தால் என்னுடைய எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டன”**

# சுத்திகரித்தல்

இயேசுவின் இரத்தம் பாவங்களை கழுவுகின்ற மற்றொரு முக்கியமான செயலை செய்கிறது. இந்த பாவத்திலிருந்து சுத்திகரித்தல் 1 யோவான் 1:7ல் சொல்லப்பட்டிருக்கிறது; “அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்”. நாம் ஒளியில் நடந்தால் முதலில் அவரோடு ஐக்கியப்படுவோம், இரண்டாவது இயேசுவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்படுவோம்.

நடத்தல், ஐக்கியப்படுதல், சுத்திகரிக்கப்படுதல் என இம்மூன்றும் நிகழ்காலத் தொடர் வினைகள். இவை ஒருமுறை நிகழ்வதல்ல. தொடர்ந்து நிகழ்வது. நாம் தொடர்ந்து வெளிச்சத்தில் நடந்தால்தான் ஒருவரோடொருவர் ஐக்கியம் தொடர்ந்து உண்டாகும். இயேசுவின் இரத்தமும் நம்மை தொடர்ந்து சுத்திகரிக்கும். இயேசுவின் இரத்தம் நம்மை சுத்திகரிக்கிறது என்று நாம் உரிமை பாராட்டினாலும், நாம் இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யாவிட்டால் உண்மையாக நாம் சுத்திகரிக்கப்பட மாட்டோம்.



இருளான வாழ்க்கை நம்மில் தொடரும்போது இயேசுவின் இரத்தம் நம்மை சுத்திகரிக்காது. ஆனால் வெளிச்சத்தில் நடந்தால் மட்டுமே சுத்திகரிக்கும். நாம் ஒளியில் நடக்கிறோம் என்பதற்கான முதல் பரீட்சை, நாம் ஒருவரோடொருவர் ஐக்கியமாக இருப்பதே. நாம் நம் சக விசுவாசிகளோடும், தேவனோடும் ஐக்கியத்தை அனுபவிக்கவில்லை என்றால் நாம் ஒளியில் இல்லை. நாம் ஒளியில் இல்லை என்றால் இயேசுவின் இரத்தம் நம்மை சுத்திகரிப்பதில்லை. அடுத்த கேள்வி, நாம் வெளிச்சத்தில் எப்படி நடக்க வேண்டும்? முதல் நிபந்தனை என்னவென்றால், நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். சங்கீதம் 119:105 சொல்கிறது, “உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது”.

இரண்டாவது தேவை என்னவென்றால் நாம் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ள வேண்டும். பவுல் இதை எபேசியர் 4:15ல் சுருக்கமாக இவ்வாறு கூறுகிறார். “அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்”. இந்தப் பகுதியில் ஒளியில் நடப்பதை நாம் நம்மோடு உள்ள சக விசுவாசிகளோடு உண்மையோடும், அன்போடும் தொடர்பு கொண்டு நடக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. நாம் ஒருவரோடொருவர் உறவு முறைகளில் உண்மையோடு மனமுவந்து நடக்க வேண்டும். ஆனால் இவற்றை அன்போடு செய்ய வேண்டும்.

வெளிச்சத்தில் நடப்பது இரு செயல்களை ஒன்றாக கொண்டது. கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது, மற்றொன்று சக விசுவாசிகளோடு உண்மையோடும், அன்போடும் நடந்து கொள்வது.

நாம் இந்த நிபந்தனைகளை சந்திப்போமானால், இயேசுவின் இரத்தம் நம் பாவங்களை சுத்திகரிக்கிறது என்பதை முழு உத்திரவாதத்தோடு கூறலாம்.

இன்று நாம் நம்மை சுற்றியுள்ள சுற்றுப்புறம் மாசுபட்டிருப்பதைக் குறித்த உணர்வுள்ளவர்களாயிருக்கிறோம். ஆனால் பாவத்தினால், ஊழலினால், தேவ பக்தியில்லாமையினால் நம்முடைய ஆவிக்குரிய சுற்றுப்புறமும் மாசுபட்டிருக்கிறது. சுத்தமாக இருக்க வேண்டுமென்றால், இயேசுவின் இரத்தத்தினால் தொடர்ந்து கழுவப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். நாம் சுத்திகரிக்கப்படுதலுக்கான நிபந்தனைகளை சந்திப்போமானால், நாம் அதற்குரிய பாவ அறிக்கை செய்வதற்கான நிலையை அடைந்துள்ளோம். நம்முடைய சாட்சியம் இவ்வாறாக இருக்க வேண்டும். “நான் வெளிச்சத்தில் நடப்பதால், இயேசுவின் இரத்தம் என்னுடைய பாவங்களை இப்போதும், தொடர்ந்தும் என்னை கழுவி சுத்திகரிக்கும்”.

இதை நாம் விசுவாசித்தால், நாம் கடவுளுக்கு நன்றி செலுத்தத் தொடங்கி விடுவோம். நாம் அவருக்கு நன்றி கூறும்போது, நாம் புது வழியில் பரிசுத்தமாகவும் சுத்தமாகவும் உணர்வோம்!! ●

... தொடரும்

சிறுகதை

ரேச்சல் காட்சன்

# உன்னால் முடியும்...



பாபு என்கிற வாலிபன் ஒரு பெரிய நிறுவனத்தின் தலைவர். தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு மிகவும் சோர்ந்து போய், அருகில் இருந்த பூங்காவிற்கு சென்றார். அப்போது ஒரு பெரியவர் இவர் அருகில் வந்து, “ஏன் சோகமாய் இருக்கிறாய்” என்றதும், “என் தொழிலில் நஷ்டம் அடைந்ததால் மிகவும் உடைந்து போய்விட்டேன்” என்றார். எவ்வளவு ரூபாய் நஷ்டம் என்று பெரியவர் கேட்க, பாபு 50 கோடி என்று சொன்னார். உடனே அந்த பெரியவர் ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரைச் சொன்னதும் பாபு அசந்து போய்விட்டார். 50 கோடி பணம் கிடைத்தால் நீ சரியாகி விடுவாயா? என்று கேட்டார் பெரியவர். உடனே முகமலர்ச்சியுடன் பாபு, “ஆமாம்” என்று சொல்ல, உடனே ஒரு செக் புக்கை எடுத்து கையெழுத்து போட்டு, “இதில் 500 கோடி ரூபாய்க்கான செக் இருக்கிறது, நீ கேட்டதை விட 10 மடங்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறேன். உன் நஷ்டத்தை ஈடு செய், ஒரு வருடம் கழித்து இந்தப் பணத்தை எனக்கு நீ திருப்பிக் கொடுத்து விட வேண்டும், அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்” என்ற நிபந்தனையோடு பாபு கையில் செக்கை திணித்துவிட்டு சென்றார் அந்தப் பெரியவர்.

உடனே பாபு மனநிம்மதியுடன், தன் அலுவலகத்திற்கு சென்று அந்த செக்கை பத்திரமாக பீரோவில் வைத்து பூட்டினார். பின்பு தனது எல்லா ஊழியர்களையும் அழைத்து, “நமது நிறுவனத்தில் ரூ.50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் தற்போது என்னிடம் 500 கோடி உள்ளது. ஆனால் அந்தப் பணத்தை நான் எடுக்கமாட்டேன். இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது, என்று ஆராய்ந்து அதைக் களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்ல செயல்படுங்கள்” என்று சொன்னார்.

அதன்பின்பு வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு எல்லாம் களையப்பட்டன. அவருடைய பேச்சு, மூச்சு, செயல், சிந்தனை, தூக்கம் எல்லாமே தொழிலைப் பற்றியே இருந்தது. வேலையும் மும்முரமாக போய்க் கொண்டிருந்தது. ஒரு வருடம் முடிந்து கணக்குகள் அலசி ஆராயப்பட்டபோது சரியாக 550 கோடி ரூபாய் லாபம் ஈட்டி இருந்தது இவரது நிறுவனம். அடுத்த நாள் காலை பெரியவர் கொடுத்த செக்கை எடுத்துக் கொண்டு அதே பூங்காவிற்கு சென்றார் பாபு. ஆனால் பெரியவரை காணவில்லை. கொஞ்ச நேர காத்திருப்புக்கு பின்பு அந்த பெரியவர் ஒரு பெண்மணியின் கைகளைப் பிடித்துக் கொண்டு வந்தது அங்கிருந்த பனிமூட்டத்தின் ஊடே தெரிந்தது. சில நொடிகளில் அந்த பெரியவரைக் காணவில்லை. அந்த பெண்மணி மட்டும் வந்தார். உடனே பாபு அந்தப் பெண்மணியிடம் சென்று, “உங்களுடன் வந்த அந்த பெரியவர் எங்கே அம்மா?” என்றார். அதற்கு அந்தப் பெண்மணி பதட்டத்துடன், “உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்தாரா?” என்றதும், “இல்லை அம்மா... ஏன் அப்படி கேட்கிறீர்கள்?” என்று கேட்டார் பாபு. அதற்கு அந்தப் பெண்மணி, “அவர் ஒரு மனநிலை சரியில்லாதவர், செக்கு தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கில் கையெழுத்து போட்டு கொடுத்து விடுவார்” அதனால் தான் உங்களிடம் கேட்டேன் என்றார் அந்த பெண்மணி. பாபுவால் எதுவும் பேச முடியவில்லை. அப்படியே வாயடைத்துப் போய்விட்டார். அப்போது தான் பாபு நினைத்தார், “ஒரு மனநிலை சரியில்லாத நபரால் கூட “உன்னால் முடியும்” என்று ஊக்குவிக்க முடியும் என்பதை உணர்ந்து, தொடர்ந்து தன் பணியை இன்னும் கடினமாய் செய்ய தீர்மானித்தார்.

**வாலிபர்களே! பெற்றோர் உங்களை உற்சாகப்படுத்தாமல் இருக்கலாம், நீ எதுக்கும் லாயக்கு இல்லை என்று சொல்லலாம். உன்னை ஊக்கப்படுத்த உற்சாகப்படுத்த மனநிலை பாதித்தவர்கள் கூட வரலாம். அதை நீ ஏற்றுக் கொள்ள தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் உன்னால் முடியும் என்பதை உணர்ந்து செயல்பட முடியும்.** ●



# ஜெபக் கையேடு

# மே 2019

1 ஐம்பது லட்சம் பேர் தினமும் மதுபானம் அருந்து கிறார்கள். மதுபானம் நம் தேசத்தில் தடைசெய் யப்பட ஜெபிப்போம்.

2 தமிழகத்தில் ஏழு கோடி மக்களில் ஒரு கோடி மக் கள் மது அருந்துகிறார்கள். சுமார் 49 லட்சம் பேர் தினமும் குடிக்கு அடிமையானவர்கள். குடிவெறி யின் ஆவியைக் கட்டி ஜெபிப்போம்.

3 இந்தியாவிலேயே, மது அருந்துபவர்கள் அதிகம் உள்ள மாநிலம் நம் தமிழ்நாடு என்பது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயம். மதுவைக் கொண்டு வந்து குடும்பங்களை சீரழிக்கும் பிசாசின் கிரியைகளை அழித்து ஜெபிப்போம்.

4 மதுகுடிப்பதினால் 25% பேர் மனநிலை பாதிப்புகளி னாலும், 10% பேர் நரம்புத் தளர்ச்சி மற்றும் அறிவாற்றல் குறைதல் போன்ற நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு விழிப்புணர்வு உண்டாக ஜெபிப்போம்.

5 சாராய தொழிற்சாலைகள், மது தொழிற்சாலைகள் மூடப்பட அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

6 நாட்டில் குழந்தைத் திருமணம் அதிகம் நடைபெறும் மாநிலத்தில் தமிழகம் முதலாவது இடத்தில் இருப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பக புள்ளிவிவரம் கூறுகிறது. குழந்தைத் திருமணம் தடை செய்யப்பட ஜெபிப்போம்.

7 உலகில் ஒரு நிமிடத்துக்கு 28 பெண் குழந்தை திருமணங்கள் நடக்கின்றன. இதில் இரண்டுக்கும் மேற் பட்ட திருமணம் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இவை முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபிப்போம்.

8 இந்தியாவில் மட்டும் 18 வயதுக்கும் குறைவாக உள்ள 10.3 கோடி இந்தியர்கள் குழந்தைத் திருமணம் செய்கி றார்கள். இதில் 8.52 கோடி பேர் பெண் குழந்தைகள் என்பது அதிர்ச்சித் தகவல். இதை அரசாங்கம் தடை செய்ய ஜெபிப்போம்.

9 பெண் குழந்தைகளை தொந்தரவாக நினைத்து குழந்தைத் திருமணத்தை நடத்தும் பெற்றோருக்கும், அதை ஏற்கும் சிறுகுழந்தைகளுக்கும் விழிப்புணர்வு உண்டாக ஜெபிப்போம்.

10 மே மாதத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிக ரிக்கும் என வானிலை அறிக்கை அறிவித்துள்ளது. வெயிலினால் மரணங்களோ, எந்த விதமான தோல் வியாதிகளோ வராதபடி தடுக்கப்பட ஜெபிப்போம்.

11 தமிழ்நாட்டில் கோடை காலங்களில் மின்சாரம் பற்றாக்குறை இல்லாமல் கிடைக்கவும், மின் விநி யோகம் சரியான முறையில் இயக்கப்படவும் ஜெபிப்போம்.

12 கோடை காலத்தில் தமிழ்நாட்டிற்கு தேவையான தண்ணீர் கிடைக்கவும், நல்ல மழை பெய்து செழிப்பு உண்டாகவும் ஜெபிப்போம்.

13 கோடை வெயிலினால் விவசாயங்கள் பாதிக்கப் படாதபடிக்கும், தண்ணீர் இல்லாமல் விவசாயம் பொய்த்துப் போகாதபடிக்கும் நிலங்கள் மேம்பட ஜெபிப்போம்.

14 தமிழகத்தில் உள்ள ஏரிகளில் தண்ணீர் தட்டுப்பாடின்றி சேமித்து வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

**தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக் குறிப்புக்காக முழுமனதோடு ஜெபியுங்கள்.**

**உங்கள் ஜெபக்குழுவில் நீங்கள் ஜெபித்து, பதில் கிடைத்த சாட்சிகள் இருந்தால் எங்களுக்கு எழுதுங்கள். தினமும் ஒரு நிமிடம் தேசத்திற்காய் திறப்பிலே நிற்போம்...**

**15** கர்த்தரைக் குறித்த பயம் எல்லா திருச்சபைகளிலும் உண்டாகவும், ஆதி அப்போஸ்தலர் காலத்தில் ஏற்பட்ட அதே எழுப்புதல் நம் தேசத்தில் உண்டாக வும் ஜெபிப்போம்.

**16** போதகர்கள், சுவிசேஷகர்கள், மிஷனெரிகள் குடும் பங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

**17** திருச்சபை களுக்குள், ஊழியர்களுக்குள் அன்பு ஐக்கியம் வளர்ந்தோங்க, ஒருவரையொருவர் தாங்குகிறவர்களாக மாற ஜெபிப்போம்.

**18** அனைத்து சபை விசுவாசி களுக்குள்ளும் எழுப்பு தலின் அக்கினி போடப்பட்டு, பெந்தெகொஸ்தே யின் அபிஷேக அனுபவம் உண்டாக ஜெபிப் போம்.

**19** ஆராதனைக்கு வருவோர் சத்தியத்தில் வளர்ந்து பெருகவும், தேவ வல்லமை வெளிப்படவும், வேத வசனம் போதிக்கப்படவும்ஜெபிப்போம்.

**20** சிறுவர்கள், வாலிபர்கள் நடுவில் எழுப்புதல் உண் டாகவும், வாலிபர்கள் மத்தியில் ஜெபஆவி ஊற் றப்படவும் ஜெபிப்போம்.

**21** 6500 முழுநேர ஊழியர்கள் ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் எழுப்புதலுக்காக ஜெபிக்கிறவர் களாகவும், சபை மக்களின் மேல் எழுப்புதலின் தீ பற்றி எரியவும் ஜெபிப்போம்.

**22** பிரிவினையின் ஆவிகள், குறை சொல்லும் ஆவிகள் கட்டப்படவும், விசுவாசிகளுக்கும் சபை மேய்ப்பர்களுக் கும் ஒருமனம் உண்டாகவும் ஜெபிப்போம்.

**23** கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்குள் பிரிவினை, மோதல்கள் கருத்து வேறுபாடுகளை உண்டாக்க நினைக்கும் ஆவிகளை கடிந்து ஜெபிப்போம்.

**24** கல்லூரி மாணவர்கள் மற்றும் வாலிபர்களை குறி வைத்து அதிகரிக்கும் கஞ்சா மயக்க மருந்து, போதை மாத்திரை போன்ற போதை பொருட்கள் விற்பனை அதிகரித்து வருவது தடை செய்யப்பட ஜெபிப்போம்

**25** போதை பொருட்கள் விற்கும் கும்பலிடம் வாலிபர் கள் சிக்கிக் கொள்ளாதபடி எச்சரிக்கையாக இருக்க ஜெபிப்போம்.

**26** போதை பொருட்களை ஒருமுறை பயன்படுத்தி னால் தொடர்ந்து பயன்படுத்தும் எண்ணம் ஏற்பட்டு அதற்கு அடிமைப்பட்டு படிப்பு வேலைகளில் கவனம் செலுத்த முடியாமல் தவிக்கும் வாலிபர்கள் மீட்கப்பட ஜெபிப்போம்.

**27** போதை பொருட்களுக்கு அடிமையாகி இருப்பதால் எதிர்காலம் பாழாக்கப்பட்டு சமுதாயத்ததால் புறக்க ணிக்கப்பட்டு பல இன்னல்களை எதிர்கொள்ளும் வாலிபர்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

**28** கல்லூரி மாணவர்களுக்கு போதை மருந்துகளை சப்ளை செய்யும் கும்பல் தண்டிக்கப்பட ஜெபிப் போம்.

**29** பணத்திற்கு ஆசைபட்டு போதை பொருட்களை விற்பனை செய்ததால் தங்களது நல்ல தொழில் களை இழந்து தவிக்கும் பட்டதாரி வாலிபர்கள் இந்த தொழில்களிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்

**30** கஞ்சா போதை பொருட்கள் தடை செய்யப்படவும், விற்பனையாளர்களுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவும் ஜெபிப்போம்.

**31** எதிர்கால வாழ்க்கை கேள்விகுறியாக இருக்கும் வாலிபர்கள் மனந்திரும்பி இயேசுவண்டை வர ஜெபிப்போம்.




நாலுமாவடி
தேவனுடைய
கூடாரத்தில்...

## மே 20,21,22

ஞாயிறு, திங்கள், செவ்வாய்



# நற்செய்தியாளர்கள் பயிற்சி முகாம்

பயிற்சியாளர்கள்

**சகோ. மோகன் சி. லாசரஸ் | சகோ. A. அப்பாத்துரை | சகோ. டேவிட் கணேசன்**

பதிவுக் கட்டணம் ரூ.100/- மட்டும் | ஆண்கள், பெண்கள் தங்குவதற்கு தனித்தனி இடவசதி உண்டு.
உணவு, தேநீர் வழங்கப்படும். | தெரிந்துகொள்ளப்படுவோர் மட்டுமே இம்முகாமில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்

விண்ணப்பப் படிவம் பெற உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள் :
Jesus Redeems, Nalumavadi, 628 211, Thoothukudi dt., & Jesus Redeems Gethsamane Prayer Centres
(மேலும் விபரங்களுக்கு +91 8300135315, 04639 - 220022, 7094777783)

நாலுமாவடி
தேவனுடைய கூடாரத்தில்...

## மே 23 காலை 8:30 மணி முதல் மே 25 மாலை 3 மணி வரை



முகாமின்
பதிவுக்
கட்டணம்
ரூ.10/-

# விடுதலை முகாம்! 2019

தேவ செய்தியாளர்கள்



**சகோ. மோகன் சி. லாசரஸ்**
சகோ. அப்பாத்துரை | Dr. R. அன்புராஜன்
Pr. ஆபிரகாம் | சகோ. S. சாம் ஜெபராஜ்
(ஓசன்னா ஊழியங்கள், குண்டூர்)



இரவு மட்டும் உணவு வழங்கப்படும்,
உணவுக் கட்டணம் தனி. ஆண்கள், பெண்கள் தங்குவதற்கு
தனித்தனி இடவசதிகள் உண்டு! தொடர்புக்கு 04639 -22 00 22.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/81-A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# வாலிபர் கொண்டாட்டம்

**சங்கரன்கோவிலில்**

## மே 26 (3 - 6 pm)

ஞாயிற்றுக்கிழமை

**இடம் : இயேசு விடுவிக்கிறார் கெத்செமனே ஜெப மையம், ஷெக்கினா எம்பயர் ஹால், காங்கிரஸ் பொன்விழா மைதானம் பின்புறம், முல்லை நகர்.**

**செய்தி**

**சகோ. சாம் ஜெபராஜ்**

**8344949555 | 9442885315**



**ஆலங்குளத்தில்**

## மே 30 (9 am - 4 pm)

வியாழக்கிழமை



**இடம் : சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, நல்லூர், ஆலங்குளம் தாலூகா**

**செய்தி: சகோ. அவினாஷ்**

**9965377427 | 9442885315**
**9500372498**

**திருப்பூரில்**

## ஜூன் 2 (4 - 8 pm)

ஞாயிற்றுக்கிழமை

**இடம் : T.E.L.C ஆலய வளாகம், சபாபதிபுரம், திருப்பூர்**

**செய்தி**

**சகோ. சாம் ஜெபராஜ்**

**9843270925 | 9442885315**
**9750955549**



**பொள்ளாச்சியில்**

## ஜூன் 9 (4 - 8 pm)

ஞாயிற்றுக்கிழமை



**இடம் : அன்னை சமுதாயக் கூடம், பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி பேருந்து நிலையம் அருகில்.**

**சகோ. A. அப்பாத்துரை**

**9750955549 / 9442885315**

**சென்னையில்...**

**"ஆசீர்வாதமான சென்னை" நடத்தும்**

**வாலிபர் மற்றும் இளம் வாலிபர்களுக்கான** வயது 15-30

## எழுப்புதல் உபவாச முகாம்

**இடம் : YMCA ராயபேட்டை**

**செய்தி: சகோ. மோகன் சி. லாசரஸ்**

## ஜூன் 1 9 am - 5 pm

சனிக்கிழமை

**வாலிபர்களே! சென்னைப் பட்டணத்தின் எழுப்புதலுக்காக உபவாசித்து ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம்!!**



Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2017-2019.
Date of Publication: 25-04-2019.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2017-2019.

## நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில்...

2019
ஆகஸ்ட்
16
17
18
3 நாட்கள்



# சேனை

## வாலிபர் தலைமைத்துவ பயிற்சி முகாம்

வயது வரம்பு : 17-35 பதிவுக் கட்டணம் 200/-

குறிப்பு: இரட்சிப்பின் அனுபவம் இருக்க வேண்டும்.
ஊழியம் செய்ய வாஞ்சையுள்ளவர்கள் மட்டும்!

பயிற்றுவிப்போர்







சகோ. மோகன் சி. லாசரஸ் | சகோ. அப்பாத்துரை | சகோ. சாம் ஜெபராஜ்

இம்முகாமில் பங்குபெற விரும்புவோர் பெயர், வயது, விலாசம், தொலைபேசி எண்,
உங்களுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு? இரட்சிப்பின் அனுபவம்? ஊழிய அனுபவம்?

மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு நான்கு வரிகளில் பதில் எழுதி **e-mail**
**(youth@jesusredeems.org)** மூலமாகவோ,
கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு கடிதம் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்!
விண்ணப்பப் படிவம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **ஜூன் 30, 2019**
இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம், நாலுமாவடி - 628 211, தூத்துக்குடி மாவட்டம்
**jesusredeems.com/senai** என்ற இணையதளத்திலும் பதிவு செய்யலாம்
மேலும் விவரங்களுக்கு: **9750955548/ 9750955549/ 9442885315 / 04639-220022**